1334 gd. No. M. 257



# லவித்யா சந்தா விபரம்.

, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

கப்பூர், பினாங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாட க்கு முன்பணம் ரூபா 2—0—0.

ஜீவய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15. வெளி நாட்டிற்கு ரூ 20.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளையெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால் உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்

(3) சந்தாதாரர்கள் தமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இருபாலர்க்கும் ஸௌகர்யம். வி. பி. யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நாலு அணா அதிகமாக செலவாகிறது சிங்கப்பூர் பினாங் முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பித்தாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தா நம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுபவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமான காலம் முந்தியே அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப்பக்கம் ரூ 20. அரைப் பக்கம் ரூ 11

மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்

பாலவித்யா ஆபீஸ்,

நெ. 5, கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
188791

# பாலவித்யா.

(மாதப் பத்திரிகை.)

11 MAR 1932

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"



| தொகுதி III | 1932௵ பிப்ரவரி௴<br>பிரஜோத்பத்தி௵ மாசி௴ | பகுதி II |
|---|---|---|



## ஹாஸ்ய விநோதங்கள்.

பையன் :—ஸார்! ஸார்!! அவஸரமாய் வெளியில் போகவேண்டும் ஸார்.

உபாத்தியாயர் :—(கடுகடுப்புடன்) கூடாது; கூடாது

[பையன் வெளியிற்சென்று சிறிது நேரத்திற்கெல்லாம் வருகிறான்]

உபாத்தியாயர் :—(கோபத்துடன்) ஏண்டா! உன்னை யார் வெளியில் போகச் சொன்னது?

பையன் :—நீங்கள்தான் ஸார்! கூடாது; கூடாது என்று சொன்னீர்களே: இரு எதிர்மறை வார்த்தைகள் சேர்ந்தால் ஒரு உறுதி மொழியைக் காட்டும் (Two negatives make one positive) என சற்றுமுன்பு தாங்கள்தானே கூறினீர்கள்?

* * * *

உபாத்தியாயர் :—(தன் நண்பரைப் பார்த்து) ஸார்! எனக்கு கொஞ்சம் வைத்தியமும் தெரியும். வேண்டுமானால் தங்கள் தேகத்தைக் கவனிக்கட்டுமா?

ஓர் பையன்: ஸார்! வேண்டாம். நல்லயோஜனை செய்தீர். உங்கள் வைத்தியத்தை உங்கள் சிநேகிதரிடம் காட்டவேண்டாம். யாராவது விரோதிகளிருந்தால் பாருங்கள்.

*     *     *

துரை:—மிஸ்டர் டைபிஸ்ட்! உமக்கு இந்த மாதத்திலிருந்து சம்பளம் உயர்த்தியிருக்கிறோம். நல்ல மிஷினும் வாங்குவதாய் உத்தேசம்.

டைபிஸ்ட்:—(சலாம் செய்து) ஸார்! என் வாயில் மண்ணைப் போட்டீர்கள். இந்த ஓட்டை மிஷினையும், சம்பளக் குறைவையும் கண்டுதான் ஒருவரும் வராமலிருக்கிறார்கள். இனிமேல் என் வேலைக்கும் ஆயிரம் பேர் காத்திருப்பார்கள்.

*     *     *     *

பட்டிக்காட்டான்:—ஏ! டிக்கட்டு விற்கிற ஐயா! ஒரு டிக்கட்டு என்னவாகும்?

புக்கிங் கிளார்க்:—எந்த ஊருக்குப் போகிறாய்?

பட்டிக்காட்டான்:—அதுமுதல்கொண்டு உனக்கு சொல்லணுமோ? அதான் மாயவரம் ஸ்டேஷனில் கிளம்புகிறேன். [போர்ட்டரைப்பார்த்து] ஏ சாமி! நான் எந்த ரயிலே ஏறணும்?

போர்ட்டர்:—எந்த ஊருக்குப் போகிறாய்?

பட்டிக்காட்டான்:—(கோபத்துடன்) அது என்னுக்க? யாராயிருந்தாலும் இந்தக் கேள்வை கேட்கிறீங்க...சரி; தஞ்சாவூருக்குப் போகணுங்க...

போர்ட்டர்:—[ஒரு வண்டியைக் காட்டி] சீக்கிரமாய் போய் உட்கார். வண்டி கிளம்பப்போகிறது. ஜாக்கிரதையாய் போ.

பட்டிக்காட்டான்:—(வண்டி கிளம்பும் சமயம் ஜன்னல்வழியாய் எட்டிப் பார்த்து) ஐயா! போர்ட்டர் ஐயா! உன்னையும் பெரிய அய்யாவையும் ஏமாற்றிய நானா ஜாக்கிரதையாய் போகவேண்டும்? நான் சிதம்பரம் தெரிசனத்திற்குப் போகிறேன். உம்மை ஏமாற்றிவிட்டேன் பார்த்தீரா (எனக் கூறி நகைத்தான்.)

*     *     *     *     *



குமுதம்:—அவர் உம்மைவிடக் கொஞ்சம் குட்டை. பாக்கி விஷயத்தில் உம்மைப்போலவே இருப்பார்.

பாலகி:—அவரைப்போல் நான் ஏன் இங்கு வசிக்கவேண்டும்?

குமுதம்:—அது விஷயம் அரங்கநாதனுக்கும் அவன் தோழர்களுக்கும்தான் தெரியும்.

பாலகி:—நான் நேற்றிரவு பவழக்காரத் தெருவிற்குப் போனதுகூடத் தெரியுமோ அவர்களுக்கு?

குமுதம்:—நன்றாய்த் தெரியும். மேலும் நேற்றிரவு அவ்வீட்டின் பக்கத்தில் நீர் ஒளிந்துகொண்டிருந்ததும், தியாகராஜனைக் கண்டு அவனுக்குத் தெரியாமல் நீர் அவனை அரண்மனைக்காரத் தெருவிற்குப் பின்தொடர்ந்து சென்றதும், அவர்களுக்குத் தெரியும்.

பாலகி:—அப்படியானால் தியாகராஜன் என்னைக் கண்டு கொண்டானோ?

குமுதம்:—அவனை நீர் ஓர் வீடுவரையில் பின்தொடரவில்லையா?

பாலகி:—ஆம். அவன் வசிக்குமிடம் அதுதானே?

குமுதம்:—அது எனக்குத் தெரியாது.

பாலகி:—அம்மா! உமக்கு இவ்வளவு விபரங்கள் தெரிந்திருப்பதினால் அந நால்வரில் ஒருவருடைய வாசஸ்தலத்தையாவது நீங்கள் கண்டிப்பாய் அறிவீர்கள் என்பது மட்டும் நிச்சயம். அதை என்னிடம் தயவு செய்து சொல்லவேண்டும்.

குமுதம்:—அதை இச்சமயம் சொல்ல மறுப்பதைப்பற்றி மன்னிக்கவேண்டும்.

பாலகி:—அம்மா! நீங்கள் மறுப்பதைப் பார்த்தால், நீங்களும் அப் பாவிகள் கையில் அகப்பட்டுக்கொண்டு தனியாய்த் தவிக்கிறீர்கள் என்று நன்றாய்த் தெரிகிறதே.

குமுதம்:—அப்படியுமிருக்கலாம். ஆனால் நீங்கள் உமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமானால், அவர்

களொருவருக்கும் தெரியாமல் தூரதேசம் போய்விடுவதே மேலானதென்று சொல்லவே வந்தேன்.

இதைக் கேட்டதும் பாலகிருஷ்ணன் தனது ஜேப்பிலிருந்து கைத்துப்பாக்கியை எடுத்து குமுதவல்லியிடம் காட்டி "அவர்களால் எனக்கு யாதொரு கெடுதியும் வராமல் பாதுகாத்துக்கொள்ள இதுவே போதுமானது." என்று கம்பீரமாய்ச் சொன்னான்.

இதைக் கேட்ட குமுதவல்லி அவனைப் பார்த்துப் பரிகாசமாய்ச் சிரித்து, "உமக்கு அரங்கநாதனின் விஷயம் தெரியாதுபோல் காண்கிறது. எனக்குத் தெரிந்திருப்பது போல்,உமக்கும் அவனது குணம் தெரிந்திருந்தால் இவ்வித வீரவார்த்தைகள் பேசமாட்டீர். பூனையைக்கண்ட எலியைப் போல் நடுநடுங்கி ஒடுங்கிவிடுவீர்." என்று சொன்னாள்.

பாலகி:—நீங்கள் ஒரு பெண்தானே. ஆகையால்தான் அப்படிச்சொல்லுகிறீர்கள். உமக்கு ஒத்தாசைக்கு ஒருவரிருந்துவிட்டால், இவ்விதம் சொல்லமாட்டீர்.

குமுதம்:—நான் ஒருவரையும் ஒத்தாசைக்கு அழைத்துக் கொள்ள முடியாது.

பாலகி:—தாங்களும் என்னைப்போல் அபாயத்தில் சிக்கிக் கொண்டிருக்க, நான் ஏன் உங்களுக்கு ஒத்தாசை செய்யக்கூடாது?

குமுதம்:—அவ்விதமாக ஒத்தாசை செய்வதைத் தடுக்க அனேக காரணங்கள் உண்டு. நீங்களும் நானும் தனித்தனி காரியங்களைப் பார்க்கவேண்டும். என்னை நீங்கள் உமது சத்துருவென்று நினைப்பீர்களா? அவ்விதம் நான் சொன்னாலும் நம்புவீர்களா? இது உண்மையாகில், விந்தையாய்த் தோன்றுமன்றோ?

பாலகி:—அப்படியே நீங்கள் என் விரோதியானால், உமது வார்த்தைப்படி நான் ஏன் தூரதேசம் ஓடிப்போக வேண்டும்?



குமுதம்:—அப்படிச் செய்தால்தான் உமக்கு நன்மை ஏற்படும். மேலும் என் வார்த்தையின்படி நடக்கவேண்டுமென்றே தூண்டப்படுவீர்.

பாலகி:—ஏன்?

குமுதம்:—நீர் அந்த வீட்டிற்கு போனதினால் ஒப்பந்தத்தை மீறி நடந்துவிட்டீர். உமது ஒப்பந்தமும் ரத்தாகிவிட்டது.

பாலகி:—ஆம். அது எனக்குத் தெரியும். ஆனால் உண்மை என்னவெனில், இப்பொழுது போலீஸ்காரர் என்னைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கையிலகப்பட்டு மானமிழப்பதைக்காட்டிலும் தற்கொலையோ அல்லது அயல்நாட்டிற்கு ஓடிப்போவதோ இவைகளில் ஒன்றுதான் ஸரியான வழி.

குமுதம்:—இந்த விஷயம் எனக்கு ஏற்கனவே தெரியும்.

பாலகி:—இதை உமக்குச் சொன்னது யார்?

குமுதம்:—இதைப்பற்றி நேற்றைய தினம்தான் கேழ்விப்பட்டேன்.

பாலகி: —யார் சொன்னார்கள்?

குமுதம்:—உம்மைப்பற்றிய தகவல் எனக்குத் தெரியுமென்பதே போதுமானது. உமது நடமாட்டங்கள் எப்பொழுதும் கவனிக்கப்பட்டுவருகிறது என்பதை மட்டும் கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். உம்மை இவ்வளவு சுயேச்சையாக விட்டு வைக்க அவர்களுக்கு இஷ்டமில்லை. உம்மையே கவனித்துவருகிறார்கள்.

பாலகி:—அப்படியானால் நீங்கள் இங்கு வருவதுகூட அறிவார்களோ?

குமுதம்:—அனேகமாய்த் தெரிந்திருக்கும். ஆகையால் எந்த சமயத்தில் எனக்கு ஆபத்து வருமோ தெரியாது.

பாலகி:—அப்படியிருந்தும் என் ஒத்தாசையை ஏன் மறுக்கிறீர்?

பாலகி :—எனக்குத் தைரியமிருந்தால் அப்படியே நாடுவேன். அப்படி உம்முடைய ஒத்தாசை இருந்தாலுங்கூட, அதனால் எனக்காவது உமக்காவது யாதொரு பிரயோஜனமும் ஏற்படாது. ஆனால் நம்முடைய முடிவுகாலம் சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடுவது நிச்சயம்.

பாலகி :—நீங்கள் இவ்விதம் மறைபொருளாய்ப் பேசக்கூடாது. உண்மையைச் சொல்லவேண்டும்.

குமுதம் :—நான் அப்படியொன்றும் மறைவாய்ப் பேசவில்லை. நீங்கள் உமது சரீரத்தை அரங்கநாதனுக்கு மாதம் ஒன்றுக்கு ஆயிரரூபாய்வீதம் இரண்டுவருஷங்களுக்கு விற்றிருக்கிறீர்கள். தங்களிஷ்டப்படி எப்பொழுது வேண்டுமானாலும் உம்மைத் தொலைத்துவிட அவர்களுக்குப் பாத்தியம் உண்டென்பதைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் என் வார்த்தையை நம்பி உமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும்.

பாலகி :—ஸரி. அப்படியானால் எவ்வகையில் தப்பிக்கொள்வது?

குமுதம் :—இந்தியாவைவிட்டு ஓடிப்போவதுதான்.

பாலகி :—அவர்கள் என்னைப் பின்தொடரமாட்டார்களா?

குமுதம் :—நீ ஓடிப்போனால்தான் உயிர் தப்பலாம்.

பாலகி :—உமக்குத் தியாகராஜனைத் தெரிந்திருக்கலாம். அவன் ஏன் நேற்றிரவு பவழக்காரத் தெருவிற்கு வந்தான்?

குமுதம் :—ஓர் தபாலுக்காக.

பாலகி :—அத் தபால் யாரிடமிருந்து வரவேண்டியது.

குமுதம் :—உண்மையான பத்மநாபரிடமிருந்து வரும் தபால்.

பாலகி :—பத்மநாபரா? அவர் எங்கு வசிக்கிறார்?

குமுதம் :—இப்பட்டணத்திலேயேதான் வசிக்கிறார். மேலும் அவரை மூன்று நாட்களுக்கு முன் ஓர் விருந்தில் பார்த்தேன்.



பாலகி :—அவருக்கு எச்சரிக்கை செய்தவர் யார்?

குமுதம் :—அது உமக்கு எப்படித் தெரியும்?

பாலகி :—அது என் ரகசியம். அதைப்பற்றி உமக்கென்ன? இப்பொழுது மர்மமாய்ப் பேசுவது என் முறை. ஒன்றுமட்டும் சொல்லுகிறேன் கேளுங்கள். உமக்குப் பத்மநாபரை நன்றாய்த் தெரியும். அவரும் உம்முடைய நண்பர்களில் ஒருவரே. எனக்கு எச்சரிக்கை செய்தமாதிரி நீங்கள் அவருக்கும் எச்சரிக்கை செய்திருக்கிறீர்கள். நீர் ஏன் அப்படிச் செய்யவேண்டும்?

குமுதம் :—அவரிடம் அரங்கநாதன் கொண்டுள்ள கெட்ட எண்ணங்களும் சூழ்ச்சிகளும் அழிந்துபோகவேண்டுமென்பதுதான்.

பாலகி :—அவர் பெயரோடு நான்தான் இருக்கிறேனே. அவர்கள் சூழ்ச்சி ஏன் முடிவடைந்திருக்கக்கூடாது?

குமுதம் :—ஏனென்றால் அவர்கள் அப்படிச் செய்யத் துணியமாட்டார்கள்.

பாலகி :—ஓகோ! அப்படியா? உம்மிடம் அவர்கள் பயந்துகொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. அதனால்தான் இப்படிச் சொன்னீர்களோ?

குமுதம் :—ஆம்.

இவள் இப்படிச் சொல்லி வாய்மூடுமுன், அவர்கள் இருந்த அறையின் கதவு திறக்கப்பட்டு, ஓர் மனிதன் இவர்கள்முன் வந்து நின்றான். அவனைப் பார்க்க இருவரும் நடுங்கி சவம்போல் அசைவற்று நின்றார்கள். வந்தவன் அரங்கநாதனே.

---

## அத்தியாயம் 7.

அம் மூவரும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு ஆச்சரியத்தினால் பேச நாவெழாமல் பிரதிமைபோல் அசைவற்று நின்றார்கள். குமுதவல்லி தன்னை ஒருவாறாய்ச் சமா

ளித்துக்கொண்டு அரங்நாதனைப் பார்த்து "ஐயா! இது உமக்கு ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் உண்டாக்கலாம். உம்மைத் தேடிக்கொண்டு உமது ஜாகைக்கு வந்தேன். நீங்கள் வெளியே சென்றிருப்பதாய்க் கேழ்விப்பட்டேன். ஆகையால் ஒருக்கால் இங்கே உம்மைக் காணலாமோவென்று இங்கே வந்தேன்." என்றாள்.

அரங்க :—ஆம். நான் வெளியே போகவேண்டிய முக்கியமான காரியம் அகஸ்மாத்தாய் ஏற்பட்டுவிட்டது. நாம் முன் ஏற்பாடு செய்துகொண்டபடி சந்திக்க முடியாததின் காரணத்தை உனக்குச் சொல்லியனுப்ப சாவகாசமும் கிடையாது. மன்னிக்கவும்.

குமுதம் :—தங்களைப்பற்றி விசாரித்துத் தெரிந்துகொள்ளலாமென்றே இங்கே வந்தேன்.

பாலகி :—ஆம்; வாஸ்தவமே. இந்தம்மாள் சற்று முன்தான் இங்கேவந்து தங்களைப்பற்றி விசாரித்துக்கொண்டிருக்கையில் நல்லவேளையாய் நீங்களே இங்குவந்துவிட்டீர்கள். ஆனால் நான் ஒன்றுமட்டும் சொல்லுகிறேன். (என்று அரங்கநாதனைப் பார்த்து மேலே சொல்ல அனுமதிக்கும்படியான பார்வையாய்ப் பார்த்தான்.)

அரங்கநாதன், பாலகிருஷ்ணன் கருத்தைத் தெரிந்துகொண்டு, அவன் என்ன சொல்லப்போகிறான் என்பதைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு "நீ உன் மனதிலுள்ளதை இக் குமுதவல்லி இருந்தபோதிலும் தாராளமாய் மனம்விட்டுச் சொல்லலாம்." என்றான்.

பாலகி :—வேறொருவன்போல் இங்கே வசிப்பது எனக்கு விந்தையாகவும் கஷ்டமாகவும் இருக்கிறது.

அரங்க :—இதுதானா? இதில் என்ன கஷ்டம்? நீ மிக்க படிப்பாளியாய் வெளியே விசேஷமாய்ச் செல்லாத பத்மநாபன். நான் இதைப்பற்றி மிகவும் ஜாக்கிரதை எடுத்துக்கொண்டிருக்கிறேன். நீ கவலைப்படவேண்டாம்.



பாலகி :—ஆனால்...

அரங்க :—நான் சொல்வதைச் சற்று கவனி. இப் பட்டணத்தில் இந்த அற்ப வேலைக்கு உன்னைவிட மிக்கக் கேவலமாயுள்ளவர்கள் கிடைப்பார்கள் என்பதை நீயே அறிவாய். நீயோ பணமுடையுடையவன். உனக்கு வேண்டிய பணமும் கொடுத்திருக்கிறேன். இன்னமும் கொடுக்கப்போகிறேன். நீயும் இதற்குச் சம்மதித்தாய்.

இதற்குப் பாலகிருஷ்ணன் பதில் சொல்லமுடியாமல் விழிக்கலானான். ஆனால் குமுதம் அங்குவந்ததைப்பற்றி அரங்கநாதனுக்கு அவள்மேல் சந்தேகமும் அடங்காக் கோபமும் ஏற்பட்டிருப்பதாக அவனது முகத்திலிருந்து தெரிந்துகொண்டு என்ன நடக்குமோவென்று ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

குமுதம் :—நான் உங்கள் வீட்டில் விசாரித்தபொழுது நீங்கள் வெளியேபோய் இரண்டுநாட்கள் ஆகிறது என்று சொன்னார்கள். ஆகையால் இங்கு விசாரிக்கலாம் என்று வந்தேன்.

அரங்க:—உனக்கு இவனை முன்பின் தெரியாதிருக்க நீ ஏன் இங்கு வரவேண்டும்?

குமுதம் :—நீங்கள் இவருடன் அடிக்கடி கடிதப்போக்குவைத்துக்கொண்டிருப்பதாய்த் தியாகராஜன் சொல்லித்தான் எனக்குத் தெரியும்.

அரங்க :—அவன் பெரிய முட்டாள். அவன் செய்தது தவறு. நீயும் இவனைப் பார்க்கக்கூடாதென்பதை அவன் அறிந்திருக்கவேண்டும்.

குமுதம் :—அது நன்றாய் எனக்குத் தெரியும். இது விஷயத்தில் பிறர் புத்திமதியைக் கேட்க எனக்கு அவசியமுமில்லை. உம்மைப்பற்றி விசாரிக்கவே இங்கு வந்தேன்.

அரங்க :—என்ன விசேஷம்?

குமுதம்:—ஓர் முக்கியமான விஷயத்தைப்பற்றி உம்முடன் ஆலோசிக்கவேண்டியது அவசியம். ஆகையால் இங்கே வந்தேன்.

அரங்க:— அதுநாளைவரையிலும் தாமதித்திருக்கக்கூடாதா?

குமுதம் :—ஒருக்கால் நீங்கள் இப் பட்டணத்தைவிட்டு வெளியே போய்விடப்போகிறீரோ என்று எண்ணினேன். ஏன் நீங்களும் இதுவிஷயமாய் மூன்று நாட்களுக்குமுன்பு ஆனந்தபவனத்தில் என்னிடம் சொன்னது உமக்கு ஞாபகமில்லையா? அப்படி ஞாபகத்திலிருந்தால் நான் உம்மைத் தேடிக்கொண்டு இங்கே வந்ததில் யாதொரு தப்பிதமும் இருப்பதாகத் தங்களுக்குத் தோன்றாதே.

அரங்க :—எப்படி இருந்தபோதிலும் நீ இங்கு வந்திருக்கவே கூடாது.

அரங்கநாதன் கோபமாய் இருப்பதால் அவன் புத்தியை வேறுவகையில் திருப்பவேண்டுமென்று எண்ணிய பாலகிருஷ்ணன் அரங்கநாதனை நெருங்கி " ஐயா! எனக்குச் சேரவேண்டிய ரூபாய் ஐநூறையும் பாங்கியில் என் பெயரால் கட்டியதற்கு அனேக வந்தனம். அதை முன்னமே தபால்மூலமாய்த் தெரியப்படுத்தியிருக்கவேண்டும். அப்படிச் செய்யாததற்கு மன்னிக்கவேண்டும்." என்றான்.

அரங்க :—நம்முடைய ஒப்பந்தப்படி நீ எவகளுடன் கடிதப் போக்குவரதது வைத்துக்கொள்ளக்கூடாதென்பது ஞாபகத்திலிருக்கட்டும்.

பாலகி:—அது எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. ஆனால்-

அரங்க :—ஆனால் என்ன ?

பாலகி :—நான் வெளியே போகாமல் இங்கேயே கைதியைப்போல் இருப்பது கஷ்டமாய் இருக்கிறது.

அரங்க .—ஆம்; உண்மைதான். எனக்கும் வருத்தமாய்த்தானிருக்கிறது. இதற்குக் காரணம் நீ பாபராய் இருப்பதுதான் அப்படி இல்லாவிட்டால் இப்பொழுது நீ அணிந்துகொண்டிருக்கும் வேஷத்தோடு



பத்மநாபனென்றே வெளியே உன் இஷ்டப்பிரகாரம் திரியலாம். என்ன செய்வது? இது உன் தலைவிதி.

பாலகி :—எனக்கு இங்கு வசிப்பது கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் சமீபததிலுள்ள கிராமங்களில் எதிலாகிலும் வசிக்கலாமோ ?

அரங்க :—அது முடியாத காரியம். பத்மநாபன் இப் பட்டணத்திலிருந்தே தீரவேண்டும். மாதம் ஆயிர ரூபாய் சம்பாதிக்க இந்த அற்ப கஷ்டத்தையும் படலாம். இன்னும் மேலான கஷ்டங்களையும் அனுபவிக்கலாம். மேலும் புஸ்தகங்களை ஏராளமாய் வரவழைத்து வாசிப்பிலாகிலும் அல்லது சித்திரம் வரைவதிலாகிலும் காலத்தை வெகு சுலபமாயும் சுகமாயும் கழிக்கலாம். இவ்விதத்தில் கௌரவமாய் மாதம் ஏராளமான ரூபாய்கள் சம்பாதிக்க எத்தனையோ நாடோடிகள் இப் பட்டணத்தில் முன்வருவார்களே.

பாலகி :—இது மிகவும் கௌரவமான வழிதான்.

அரங்க :—சொல்வதை விளங்கச் சொல் ?

பாலகி :—விளங்கச் சொல்லுகிறேன் கேளுங்கள். என் சரீரத்தை உமக்கு நான் விற்றுவிட்டாலும் என் கௌரவத்தையும் மனச்சாக்ஷியையும் உங்களால் வாங்க முடியாது. (என்று மிக்க கோபத்துடன் படபடப்பாய்ச் சொன்னான்.)

அரங்க :—கௌரவமா? மனச்சாக்ஷியா ? நீ செய்திருக்கும் அத் தப்புத்தண்டாக்களே அவைகளுக்குப் போதுமான சாக்ஷி. மேலும் இச்சமயம் போலீஸ்காரர்கள் உன்னைத் தேடிக்கொண்டிருப்பதே போதுமானது. (என்று ஏளனமாய்ச் சொன்னான்.)

பாலகி :—அப்படிச் செய்தது என் சுயபுத்தியாலல்ல ?

அரங்க :—ஓகோ! அப்படியா? அதைக் கொஞ்சம் விபரமாய்ச்சொல்.

பாலகி :—அதைப்பற்றி உமக்கென்ன ? அது என் ரகசிய விஷயம்.

அரங்க :—கௌரவமோ அகௌரவமோ. நீயும் நானும் ஒப்பந்தம் செய்துகொண்டுவிட்டோம். நீயும் அதன்படி நடந்தேதீரவேண்டும். இல்லாவிட்டால் உனக்கு அபாயமேற்படுவது நிச்சயம். இதை மனதில் வைத்துக்கொள்.

பாலகி :- நான் இப்பொழுது பத்மநாபனென்று வசித்துக்கொண்டிருப்பதிலுள்ள அபாயத்தைக்காட்டிலும், அந்த அபாயம் ஜாஸ்தியானதாக இருக்குமென்று தோன்றவில்லை. நீரும் உமது தோழர்களும் அக் குழந்தை கல்யாணியைக்கொண்டு என்னை ஏமாற்றி உங்கள் வீட்டிற்குக் கொண்டுவரும்படிசெய்து உங்கள் வலையில் சிக்கவைத்தீர்கள். இப்பொழுதுதான் உண்மை எனக்குத் தெரிந்தது. இனி நான் இந்த நிலைமையில் ஒருநிமிஷம்கூட இருக்கமாட்டேன். உம்முடைய பணத்தை வேண்டுமானாலும் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன். என் ஒப்பந்தத்தை உடனே ரத்து செய்துவிடவேண்டும்.

அரங்க :—சரி. அப்படியானால் உன் இஷ்டம்போல் நடந்துகொள். போலீஸ்காரர் கையிலகப்பட்டுக்கொண்டு கஷ்டப்படு. அதைப்பற்றி எனக்கு அக்கரையில்லை.

குமுதம் :—ஐயா! நீர் அரங்கநாதனுடன் வீணாகச் சண்டை போடவேண்டாம். உமக்குத்தான் கெடுதி ஏற்படும்.

பாலகிருஷ்ணன், குமுதத்தின் அவ்வார்த்தைகளை லக்ஷியம் செய்யாமல், அரங்கநாதனை வெறிக்கப் பார்த்து "நீர் சொன்னபடி நான் நடக்காவிட்டால், போலீஸ்காரர்களுக்கு நீர் உண்மையை ரகசியமாய்ச் சொல்லி, என்னைக் கைதுசெய்விப்பதாய் யோசித்திருப்பதுபோல் காண்கிறது. அவ்விதமே செய்துகொள்ளும். ஆனால் இந்த நிமிஷமே இந்த டெலிபோன் மூலமாய் பத்மநாபனின் சவமிருக்குமிடத்தைப் போலீஸ்காரர்களுக்குத் தெரியப்படுத்தப் பின்வாங்கமாட்டேனென்பதை உறுதியாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்." என்றான்.



இவ்வார்த்தைகளைக் கேட்ட அரங்கநாதன், அடியுண்ட நாகம்போல் துள்ளி எழுந்து, கோபத்தினால் கண்கள் சிவக்கப் பாலகிருஷ்ணனை ஏற இறங்கப் பார்த்து "என்ன? சொல்வதென்ன?" என்று மிகவும் கடுகடுப்பாய்க் கேட்டான்.

பாலகி :—உண்மையைச் சொல்லுகிறேன் கேளும். உமது வீட்டில் பத்மநாபன் கொலைசெய்யப்பட்டு அவன் பிரேதம் இப்பொழுது உமது வீட்டில்தான் இருக்கிறது.

இதைக் கேட்ட குமுதவல்லி திகிலோடும் ஆவலோடும் பாலகிருஷ்ணனுடைய இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு அவன் முகத்தையே பார்த்தவண்ணம் "இது உண்மைதானா? பத்மநாபர் இறந்துவிட்டாரா? உண்மையைச் சொல்." என்று பயத்துடன் வாய்குழறக் கேட்டாள்.

அரங்க :—இல்லை. இது முழுவதும் பொய். என் வார்த்தையை நம்பு. பத்மநாதன் சௌக்கியமாய் இப்பட்டணத்திலேயே இருக்கிறான். இவன் வார்த்தையை நம்பாதே. தான் தப்பிக்கொள்ளவே இவ்வித அபாண்டமான பொய்யைச் சொல்லுகிறான்.

பாலகி :—அம்மா! குமுதம் நான் சொல்லும் வார்த்தைகள் முழுவதும் உண்மையே. நான் பத்மநாபனின் பிரேதத்தை என் கண்ணால் அவ் வீட்டில் கண்டேன். இது சத்தியம்.

அரங்க —என் வீட்டிலா பார்த்தாய்? எங்கே பார்த்தாய்?

பாலகி :— உமது வீட்டின் மெத்தையிலுள்ள உமது அறையில் சுவரோரமாய் ரத்தின கம்பளத்தின்மேல் மல்லாந்து கிடந்த பத்மநாபனின் பிரேதத்தைப் பார்த்தேன்.

அரங்க :—இது சுத்த பொய். நம்பத்தகாத பொய்.

பாலகி :—அம்மா குமுதம்! அப் பத்மநாபன் மிகவும் அயோக்கியத்தனமாகவே கொலைசெய்யப்பட்டிருக்கிறான். இந்த அநியாயமானவும் அயோக்கியத்தனமு

மான இச் சூழ்ச்சியில் இனி நான் சம்பந்தம் வைத்துக்கொள்ளவேமாட்டேன்.

அரங்க:—நீ என்ன சொப்பனம் கண்டாயா? என் வீட்டிலாவது கொலையாவது? நடக்கவாவது? இது சுத்த அபாண்டமான பொய். என் வீட்டில் கொலை நடக்கவேயில்லை என்பது எனக்கு நன்றாய்த் தெரியும்.

பாலகி:—நீ சொல்வதுதான் பொய். நான் நேரில் அச்சவத்தை என் கண்ணால் பார்த்தேன். அவன் இறந்து இருபத்துநான்கு மணி நேரத்திற்குமேல்இருக்கலாம்.

அரங்க:—அப்படி நீ சொல்வது உண்மையானால், நாம் அங்கேபோய் நேரில்பார்த்துத் தெரிந்துகொள்வோம். குமுதம்! நீயும் வா; நான் சொல்வது வாஸ்தவமா அல்லது இவன் சொல்வது வாஸ்தவமா என்பதை நீயே தெரிந்துகொள்ளலாம். நல்ல வேளையாய் வீட்டின் சாவியும் இதோ இருக்கிறது. வா போவோம்.

பாலகி:—நான் சொல்வது உண்மையே. இவ் விஷயத்தை முதலில் போலீசுக்குத் தெரிவித்துவிடுகிறேன். அப்பிரேதத்தைக் கண்டுபிடித்து குற்றவாளியைத் தண்டிக்கவேண்டியது அவர்கள் வேலை. (என்று சொல்லிக்கொண்டே டெலிபோனிடம் சென்றான்.)

உடனே அரங்கநாதன் அவனைத் தடுத்து "செய்வதை சற்று யோஜித்துச் செய். நாம் மூவரும் அங்கே சென்று பார்ப்போம். அப்புறம் உன் இஷ்டம்போல் செய்துகொள். என் வண்டியும் தயாராய் இருக்கிறது. வா போவோம்." என்று சொல்லி பாலகிருஷ்ணன் கையைப் பிடித்து அழைத்தான்.

பாலகி:—பத்மநாபன் இறந்துவிட்டது நிச்சயம். குமுதம்! வா; போகலாம்.

தமுதம்:—ஐயா! நான் உமது வார்த்தையைத்தான் நம்புகிறேன். அப்படி நம்பவும் சில காரணங்கள் உண்டு. போவோம் வாருங்கள்.



## அத்தியாயம் 8.

அவ்விதமே அம் மூவரும் வண்டியேறிப் புறப்பட்டுக் கால் மணியில் பவழக்காரத் தெருவிலுள்ள வீட்டில் வந்திறங்கினார்கள். அரங்கநாதன் அவ் வீட்டின் கதவைத் திறந்து காந்த விளக்கை ஏற்றினான். பிறகு அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு மெத்தைக்குச் சென்று தன் அறையின் கதவைத் திறந்து மின்சார விளக்கை ஏற்றிப் பாலகிருஷ்ணனைப் பார்த்து "நீ என்பேரில் தப்பெண்ணங்கொண்டு குற்றம் சாட்டுகிறாய். நீ சொல்வதுபோல் இங்கொன்றும் நடைபெறவில்லை என்று அழுத்தமாய்ச் சொல்லேன்." என்றான்.

பாலகிருஷ்ணன் பிரேதம் கிடந்தவிடத்தைப் பார்க்க அங்கு அது காணப்படவில்லை. ஆனால் கீழே பரப்பியுள்ள ரத்தினகம்பளத்தின்மேல் சாராயக்கறைமட்டுமிருந்தது. உடனே பாலகிருஷ்ணன் அரங்கநாதனைப் பார்த்து "இது மிகவும் விந்தையாயிருக்கிறதே. நீ பயந்து அது பிறர் கண்ணிற்படாவண்ணம் அப்புறப்படுத்தியிருப்பது போல் காணப்படுகிறது." என்றான்.

அரங்க:—உனக்குச் சந்தேகமிருந்தால் இவ் வீடு முழுமையும் தேடிக்கொள். நீ ஏதோ சொற்பனம் கண்டுதான் இவ்விதம் பிதற்றுகிறாய். ஏன் நிற்கிறாய்? தேடி மனதைத் திருப்திசெய்துகொள்ளுகிறதுதானே.

பாலகி:—ஓகோ! அதை அப்புறப்படுத்தியதுமல்லாமல் இவ்விதம் சொல்லி தப்பிக்கொள்ளவா பார்க்கிறாய்? அதை என் கண்ணாற் பார்த்தேன். மேலும் அதன் சொக்காய்ப் பையிலிருந்த அவன் வெள்ளி சிகரெட் பெட்டியின்மேலும், தங்க கை கெடிகாரத்தின் பின் பக்க மூடிக்குள்ளும், அவன் பெயர் செதுக்கப்பட்டிருந்ததை நன்றாய்ப் பார்த்தேன்.

குமுதம்:—அச் சிகரெட் பெட்டி எனக்கு நன்றாய்த் தெரியும். அது அவருக்குப் பரிசாக அளிக்கப்பட்டது.

பாலகி :—ஆகையால் அவன் இறந்துகிடந்ததை நான் பார்த்ததாகச் சொல்வதை நம்புகிறீர்களா ?

குமுதம் :—ஆம்.

இதைக் கேட்ட அரங்கநாதன் குமுதத்தை ஏற இறங்கப் பார்த்து "இவன் சொல்லுவதையா நீ நம்புகிறாய். என் வார்த்தையில் நம்பிக்கை இல்லையா ?" என்று மிகவும் கோபத்துடன் கேட்டான்.

பாலகி : அம்மா குமுதம் ! இதோ இதைப் பாருங்கள். இது சாராயக்கறை. பத்மநாபன் இதோ இந்த நாற்காலியிற் சாராயம் நிரம்பிய கோப்பையுடன் உட்கார்ந்துகொண்டிருந்திருக்கிறான். திடீரென்று மயக்கங்கொண்டு கீழே விழுந்ததும் இறந்திருக்கிறான். அக்கோப்பையும் சாராயத்தோடு கம்பளத்தின்மேல் விழுந்துவிட்டது. அச் சாராயக்கறைதான் இது. இந்த அயோக்கியர்கள் அவன் குடித்த சாராயத்தில் விஷத்தைக் கலந்துவைத்திருந்தார்கள். அவன் இறந்ததும் இவர்கள் பயந்து ஓடிவிட்டார்கள். அப்புறம் இவ்வீட்டிற்குள் வரவில்லை. ஆனால் ஒரு தபாலுக்காக இராவில் இவ்வீட்டிற்கு வந்திருக்கிறார்கள். நேற்றிரவு தியாகராஜன் இங்குவந்து அக்கடிதத்தை எடுத்துக்கொண்டு சென்றான். இதுதான் உண்மை.

அரங்க :—பாலகிருஷ்ணா! நீ என்ன தைரியத்துடன் என்பேரிலும் என் சிநேகிதர்கள்பேரிலும் இவ்விதமான குற்றத்தைச் சுமத்துகிறாய் ? (என்று அடக்கமுடியாத கோபத்துடன் கேட்டான்.)

பாலகி :—அப் பிணத்தை என் கண்ணால் கண்டதினாலும் அதைச் சோதித்துப் பார்த்ததினாலும்தான்.

அரங்க:—இது முழுப்பொய், சுத்த அபாண்டமான பொய்.

பாலகி :—இதா பொய் ? இதை நிரூபிக்கத் தகுந்த சாக்ஷியும் உண்டு.

அரங்க :—சாக்ஷியா ? யாரவன் ?



பாலகி :—அவன் யார் என்பதை இப்பொழுது உனக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை. இக் கொலையைக் கண்டுபிடிக்கவேண்டியது போலீஸ்காரர்வேலை. நானும் தக்க சமயத்தில் சாக்ஷியோடு அதை ருசுப்படுத்துகிறேன்.

அரங்க:—உனக்கு இன்னும் சந்தேகம் தெளியவில்லை. ஆகையால் நீ அவசியம் இவ் வீடுமுழுவதும் தேடிப்பார்க்கவேண்டும்.

பாலகி :—அது என் வேலையன்று. போலீஸ் செய்யவேண்டிய வேலை. மேலும் இறந்தவன் என்னைப்போல் வேஷம் போடப்பட்டிருந்ததின் காரணம்மட்டும் விளங்கவில்லை. எல்லாம் கூடிய சீக்கிரத்தில் வெளியாகிவிடும்.

அரங்க:—நீ சொல்வது எனக்கு அதிக ஆச்சர்யத்தை உண்டாக்குகிறது. பத்மநாபன் இறக்கவில்லை என்பதுமட்டும் நிச்சயம். ஒப்பந்தத்திலிருந்து உன்னை விடுவித்துக்கொள்ள என்பேரில் இவ்வித குற்றத்தை சுமத்துகிறாய். உன் எண்ணம் என்னிடம் பலிக்காது.

பாலகி :—சரி. அப்படியானால் நான் இவ் வீட்டைவிட்டு வெளிப்பட்டதும் நேராகப் போலீஸ் ஸ்டேஷன் சென்று சமாசாரத்தைத் தெரிவித்து மறுகாரியம் பார்க்கிறேன்.

குமுதம் :—பாலகிருஷ்ணா ! பத்மநாபர் கொலைசெய்யப்பட்டிருந்தாரா? அல்லது இயற்கையாய் இறந்திருந்தாரா? இதைமட்டும் நன்றாய் யோஜித்துச் சொல்லும்.

பாலகி :—அவன் விஷமிடப்பட்டே கொல்லப்பட்டான். அவன் உதடு நீல நிறமாய் இருந்தது.

குமுதம் :—அதை நீங்கள் நன்றாய்ப் பார்த்தீர்களா ? அது நிச்சயமாய் உமக்குத் தெரியுமா ?

பாலகி :—நான் பார்த்ததுமட்டுமா? தொட்டும் பார்த்தேன். என்னோடு வந்திருந்தவருக்குக் கொஞ்சம் வைத்திய

முழும் தெரியும். அவர்தான் விஷமிட்டுக் கொல்லப்பட்டிருப்பதாய்ச் சொன்னார்.

அரங்க :—போதும்; உன் கதையைக் கட்டு. நீ இவ் வீட்டைப் பரிசோதிக்கப் போகிறாயா? இல்லையா?

பாலகி:—என்னப் பிரயோஜனம்? நீங்கள் அதை வெகு சகசியமாய் அடக்கம் செய்துவிட்டீர்கள். எனக்கு நாழிகையாகிவிட்டது, மேற்கொண்டு நடக்கவேண்டியதைச் செய்யவேண்டும்.

அரங்க:—எனக்கும் இவ்விதமாய்ப் பொய்யும் பித்தலாட்டமும் சொல்பவனிடம் பேச இஷ்டமில்லை.

பாலகி :—நான் சொல்வது பொய்யென்பதும் மெய்யென்பதும் கூடிய சீக்கிரத்தில் போலீஸ்காரரால் கண்டு பிடிக்கப்படும்.

அரங்க: - ஸரி. போலீஸ்காரரிடம் இதைச் சொல்லப்போய் நீயே அவர்கள் கையில் சிக்கிக்கொண்டு மானமிழந்து கஷ்டப்படு.

பாலகி : — என்னைப்பற்றி நானே கவலைப்படாமலிருக்க உனக்கேன் அக் கவலை? ஆனால் இவ்விதமான கொலை முதலிய அக்கிரமச் செய்கைகளுக்கு இனி உன்னுடன் உடந்தையாய் இருப்பேனென்பதை விட்டுவிடு.

இவ்விதமாய் அவ்விருவரும் கோபாவேசத்துடன் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்ட குமுதத்தின் முகம் பயத்தினால் சவம்போலாகிவிட்டது. உடனே அவ்விருவருக்கும் மத்தியில் நின்றுகொண்டு பாலகிருஷ்ணனைப் பார்த்து "இவ் விஷயத்தில் கொஞ்சம் முன் யோஜனையுடன் நடந்துகொள்ளுங்கள். போலீசுக்குப்போய் அதனால் உங்களுக்குக் கெடுதலை விளைவித்துக்கொள்ளாதீர்கள். அவசரப்படாமல் தீர யோசித்துச் செய்யுங்கள்." என்று தன் கைகால்கள் நடுங்கச் சொன்னாள்.

பாலகி :—யோஜிப்பதென்ன? எனக்கு என்ன நேர்ந்தபோதிலும் இந்த அயோக்கியமான கொலைவிஷயத்தில்



இனி சம்பந்தம் வைத்துக்கொள்ளமாட்டேன். நான் ஒரு கொலைபாதகன் அல்ல.

அரங்க :—அப்படியா? சரி; இனி நாம் தாராளமாய்ப் பேசலாம். என்னைப் பத்மநாபனைக் கொன்ற கொலைகாரன் என்றுதானே குற்றம் சாட்டுகிறாய்?

பாலகி:—அதில் என்ன தப்பிதம்? கொலை செய்ததோடும் கூட அவனுக்கு என்னைப்போல் வேஷம்போட்டிருந்ததாகவும் கூறுவேன்.

அரங்கநாதன் "ஆகா! அப்படியா?" என்று சொல்லி வேங்கைப்புலியைப்போல் பாலகிருஷ்ணன்மீது திடீரென்று பாய்ந்தான். அடுத்த நிமிஷம் திகில்கொண்டு பயத்தால் நடுநடுங்கியவனாய் அசைவற்று நின்றுவிட்டான்.

அரங்கநாதன் பேசும்பொழுதே அவனது முகக் குறியால் தனக்குக் கெடுதல் ஏற்படுமென்று கண்டுகொண்ட பாலகிருஷ்ணன், தன் சொக்காய்ப் பையில் தயாராய் வைத்திருந்த கைத் துப்பாக்கியை ஒரு கணப்பொழுதில் எடுத்து அரங்கநாதன்மேல் குறிவைத்தபடியே அதை நீட்டி, "சீ! ஒதுங்கி எட்டி நில். கொலைபாதகா! ஒரு அடி எடுத்து வைத்தால் உன் மூளையை இத் துப்பாக்கியால் சிதற அடித்துவிடுவேன். நான் பயந்தவனல்ல. உன்னுடன் வீண் வார்த்தைகள் பேச இஷ்டமில்லை. வெளியே போகவேண்டும். விடு வழியை." என்று கோபத்தோடு கண்டிப்பாய்க் கூறினான்.

இதைக் கண்டதும் அரங்கநாதன், பாலகிருஷ்ணன் சொன்னபடியே செய்வானென்று அஞ்சி, திறந்த வாய் மூடாமலும் பதில் ஒன்றும் பேசாமலும் வழிவிட்டு விலகி நின்றான்.

பாலகிருஷ்ணன் வெளியே போகும்போது, குமுதம் அவனைப் பார்த்து "இச்சமயம் நீங்கள் ஒன்றும் செய்யவேண்டாமென்று கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதுவும் எனக்காக அப்படிச் செய்யமாலிருக்கும்படிக்குப்

பிரார்த்திக்கிறேன்." என்று மிகவும் பரிதாபகரமான குரலுடன் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

மறுநாள் சாயங்காலம் ஐந்தரை மணி இருக்கும். சூரியன் அஸ்தமிக்கும் சமயம். கீழ்ப்பாக்கத்திலுள்ள ஆனந்தநிலயமென்னும் மாளிகையிலுள்ள புஸ்தகசாலையின் பெரிய சன்னல்களின் வழியாக உள்ளேயுள்ள புஸ்தகங்கள் நிறைந்த பெரிய பீரோக்களின்மேலும் மேஜைகளின்மீதும் தனது பொன்னிறமான கிரணங்களைப் பரப்பி பிரகாசித்துக்கொண்டே சூரியன் மேற்கில் மறைந்துகொண்டிருந்தான். அவ்வறைகளின் சுவர்களில் அக் குடும்பத்தார்களின் முன்னோர்களின் படங்கள் அழகாகவும் ஒழுங்காகவும் மாட்டப்பட்டிருந்ததோடுகூட அவரவர்களின் சின்னங்களும் அதன்கீழ் வெகு அழகாய் வரையப்பட்டிருந்தன. அப் புஸ்தகசாலை மிகவும் அருமையான மேல்நாட்டுப் புஸ்தகங்களும், உள்நாட்டுப் புஸ்தகங்களும், கிடைப்பதற்கரிய பழய சுவடிகளும் நிரம்பிய பீரோக்களால் நிரம்பியிருந்தது. மேலும் அவ்வறையிலுள்ள தட்டு முட்டு சாமான்களெல்லாம் மிகவும் சுத்தமாகவும், அழகாகவும், ஒழுங்காகவும் வைக்கப்பட்டிருந்தன. சாயங்காலவேளையில் அம் மாளிகையின் அழகை வர்ணிக்கப் புகின் மிகவும் வளரும்.

அவ்வறையின் ஓர் ஜன்னலின் பக்கத்தில் ஒரு பெரிய சாய்மான நாற்காலியில் சுமார் ஐம்பது வயதுடையவும், சிவந்த மேனியும், கொஞ்சம் இரட்டைநாடியான சரீரத்தோடும், வயதினால் வெளுத்த தலைமயிர் கத்தரிக்கப்பட்டு அழகாய் சீவப்பெற்றுமுள்ள ஒருவர் உட்கார்ந்துகொண்டிருந்தார். அவர் பக்கத்திலுள்ள ஒரு மேஜையின்மேல் ஒரு பெரிய புஸ்தகம் பிரித்துவைக்கப்பட்டிருந்தது. அதன் எட்டின்மேல் அவர் தன் விரலால் தடவிக்கொண்டே வாசித்துக்கொண்டிருந்தார். அவர் அப்படிச் செய்வதைக் கவனித்துப்பார்க்கின், அவர் குருடர் என்றும் குருடர்கள் வாசிக்கக்கூடிய புஸ்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கிறார் என்றும் நன்கு விளங்கும். அவர்தான் அம் மாளிகையின் சொந்தக்காரராகிய கல்யாணசுந்தரம் பிரபு. அவரது



குடும்பம் பரம்பரையாய்ப் பிரபுக்கள். அவர் சிறுவயதிலேயே பெற்றோர்களை இழந்துவிட்டார். அவர் பிறவிக்குருடரல்லர். சுமார் பதினைந்து வருஷங்களுக்குமுன் இராஜாங்கத்தில் பெரிய உத்தியோகத்திலிருந்து நல்ல அருமையான வேலைகள் செய்து அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு பட்டமும் அளிக்கப்பெற்றார். பிறகு உத்தியோகத்திலிருந்து விலகிக்கொண்டு படிப்பதில் தனது வாழ்நாட்களைக் கழித்துக்கொண்டுவருகையில், திடீரென்று உண்டான மண்டைக்குத்தலின் பயனாகத் தன் பார்வையை இழந்துவிட்டார். உள்நாடு, வெளிநாடுகளிலுள்ள பிரக்யாதி பெற்ற கண் வைத்திய நிபுணர்களைக்கொண்டு பார்த்தும் பயன்படாமற்போயிற்று. அதன் பிறகு ஒரு மாதத்திற்கெல்லாம் ஐந்துவருஷகாலமாய் வியாதியாகவிருந்த அவரது பார்யை தனது ஆறுவயதுள்ள ஒரே பெண் குழந்தையை விட்டுவிட்டுப் பரலோகமடைந்தாள். இச் சம்பவங்கள் நடந்து சுமார் பன்னிரண்டு வருஷங்கள் இருக்கலாம். அக் குழந்தை நாளுக்குநாள் வளர்ந்து யௌவன திசையை அடைந்துவிட்டாள். அவர் மிகவும் படிப்பாளியாகையால் தனக்கு விஷயங்களைப் படித்துக்காட்ட ஓர் குமாஸ்தாவை அமர்த்தியிருந்தார். தன் குழந்தையின் ரூபலாவண்யத்தைக் கண்ணாரக் கண்டு களிக்கக் கொடுத்துவைக்கவில்லையே என்று பிரபு அடிக்கடி துக்கப்படுவார். சிற்சில சமயங்களில் தன் பெண்ணின் முகத்தை தடவிப்பார்த்து தன் குழந்தையைக் கண்ணாற் கண்டதுபோல் மேலுக்கு மட்டும் சந்தோஷத்தைக் காட்டுவார். சில சமயங்களில் தன்னையறியாமலே துக்கப்படுவார். இவர் இவ்விதம் புஸ்தகத்தை வாசித்துக்கொண்டிருக்க மணியும் ஏழு அடித்தது. அதேசமயத்தில் சாப்பாட்டு மணியும் அடிக்கப்பட்டது. உடனே சிவந்த பனாரீஸ் பட்டாடையும் மகமல் ரவிக்கையும் உடுத்திக்கொண்டு சர்வாபரணபூஷிதையாய் அவர் பெண் காமாக்ஷி தன் தகப்பனார் சமீபத்தில் வந்தாள். அவள் வரும் சப்தத்தைக் கேட்ட பிரபு புஸ்தகத்தை மூடிவிட்டுச் சப்தம் வரும் பக்கம் திரும்பிக்கொண்டார்.

காமாக்ஷி தன் பிதாவின் சமீபம் சென்று அவரது கழுத்தைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டு "அப்பா! சாப்பாட்டுவேளையாகிவிட்டதே. வாருங்கள் போகலாம்." என்று அவர் கையைப் பிடித்துக்கொண்டு குழந்தையைப்போல் கொஞ்சிக் கொஞ்சி சொன்னாள். இதைக் கேட்ட பிரபு அடக்கமுடியாத ஆனந்தங்கொண்டு அவளது கைகளைத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு "அம்மா குழந்தாய்! எனக்கு இந்த ஸ்திதியில் நீ இராமல்போனால் என் கதி என்னவாகுமோ?" என்றுசொல்லிக் கொஞ்சம் கண்கலங்கினார்.

கமாக்ஷி :—அப்பா! நான் தங்களை அடிக்கடி விட்டுப்போவதால்தான் இப்படிச் சொல்லுகிறீர்கள். இவ்விதமாய் வருத்தப்படுவதில்லையென்று பல தடவைகளில் சொல்லவில்லையா? தைரியத்தை விடாமலிருக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

பிரபு :—என் கண்மணீ! நீ இவ்வளவு சீக்கிரம் திரும்பி வந்ததைப்பற்றி மிகவும் சந்தோஷம். இனி நான் இம்மாதிரி வருத்தப்படுவதில்லை. இது நிச்சயம். என் உயிரைக்காட்டிலும் அருமையான நீ ஒருவள் எனக்கிருப்பதே போதும். நீ ஒரு நிமிஷம் என்னைவிட்டுப் பிரிந்திருந்தால் அதை என்னால் சகிக்கமுடியவில்லை. இன்னும் கொஞ்சகாலத்தில் நீயும் கல்யாணம் செய்துகொண்டு உன் புக்ககம் போகப்போகிறாய். அதன் பிறகு என் கதி—(என்று கண்ணீர்விட்டார்.)

காமாக்ஷி :—என்ன அப்பா! அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? நானா உம்மைத் தனியாய்விட்டுச் செல்பவள்? நான் ஒருநாளும் அப்படிச் செய்யமாட்டேன். உம்முடன் இருந்தே என் காலத்தைக் கழிப்பேன்.

பிரபு :—இருக்கட்டும்; நீ பட்டணம் போயிருந்தாயே; தியாகராஜனைக் கண்டாயா? அவன் எப்பொழுது வருவதாய்ச் சொன்னான்? அவன் இல்லாமல் எனக்குப் பொழுதுபோகவேயில்லை.



தியாகராஜன் பெயரைக் கேட்டதும் காமாக்ஷியின் முகம் கோபத்தால் சிவந்துவிட்டது. உதட்டைக் கடித்துக்கொண்டாள். கண்கள் சிவந்துவிட்டன. ஆனால் மறு நிமிஷம் தன்னைச் சமாளித்துக்கொண்டு "நாளை அல்லது மறு நாள் வருவதாய்ச் சொன்னான்." என்றாள்.

பிரபு :—அவனில்லாமல் நான் எப்படிக் காலம் கழிப்பேன்? மேலும் அவனைப்போல் சாஸ்திரங்களிலும் பாஷாக்கியானத்திலும் தேர்ச்சி உள்ளவன் அகப்படுவது துர்லபம்.

காமாக்ஷி :—நீங்கள் பேசிக்கொள்ளுவது ஒன்றுமே எனக்குப் புரியவில்லை. அது வெறும் பிதற்றலாகவே எனக்குத் தோன்றுகிறது.

பிரபு :—ஆம்; அவைகள் உனக்குப் புரியாதுதான். அவைகள் மோக்ஷ சாதனமான விஷயங்கள். தியாகராஜன் என்னிடம் மிகவும் பிரியமுடையவன்.

காமாக்ஷி "அப்பா! நாழிகையாகிவிட்டது. சாப்பாடு ஆறிவிடும். வாருங்கள்." என்று சொல்லித் தன் தகப்பனை போசன அறைக்கு அழைத்துப்போய், அவருக்கு வேண்டியவைகளை உண்பித்துக் கை கால்களை சுத்திசெய்து அவரது படுக்கை அறைக்கு அழைத்துச் சென்று படுக்கையில் படுக்கவைத்து அவர் தூங்கும்வரையில் வேடிக்கையாய் பேசிக்கொண்டிருந்தாள்.

பிரபு தூங்கியதும் காமாக்ஷி போசன அறை சென்று சாப்பிட்டுவிட்டுத் தன் படுக்கை அறை யடைந்தாள். அவ்விடம் தனது தோழி விஜயா தனக்காகக் காத்துக்கொண்டிருக்க, அவளைப் படுக்கப் போகும்படி உத்திரவிட்டுத் தன் மஞ்சத்தில் சயனித்துக்கொண்டாள்.

சற்றுநேரத்திற்கெல்லாம் படுக்கைவிட்டெழுந்திருந்து சாதாரண உடைகளை அணிந்துகொண்டு விளக்கை அணைத்துவிட்டு கதவை மூடி வெளிப்பக்கம் பூட்டிக்கொண்டு மெத்தையைவிட்டு வெளிப்புரவழியாய்க் கொல்லைப்பக்கம்

சென்று கதவைத் திறந்துகொண்டு தோட்டத்திற்குள் நுழைந்தாள். அவ்விடத்தில் ஓர் மரத்தடியில் ஓர் ஆசனத்தில் ஓர் புருஷன் உட்கார்ந்துகொண்டிருப்பதைக் கண்டு வேகமாய் அவனிடம் சென்று அவனது கரங்களை ஆவலோடு பற்றப்போகும்சமயத்தில் அவனது முகத்தை உற்றுப்பார்த்தாள். உடனே சற்று விலகி நின்று "ஆ! நீயா? நான் மோசம்போனேன். நீ ஏன் இங்கு வந்தாய்? அயோக்கியா! உனது எண்ணம் எனக்கு நன்றாய்த் தெரிந்துவிட்டது. நான் துணையற்றவளென்று எண்ணிவிட்டாயோ? உனக்கு என்ன தைரியம்? இப்பவே உன்னைப் போலீஸ்காரர் வசம் ஒப்பிவித்துவிடுவேன். போ வெளியே. இங்கு நிற்காதே." என்று கடுகடுப்பாய் அதிகாரத்தோடு கூறினாள்.

---

## அத்தியாயம் 9.

காமாக்ஷி இப்படிச் சொல்லியதும் அம் மனிதன் "காமாக்ஷி? ஏன் கோபித்துக்கொள்ளுகிறாய்? நான்தான் வந்திருக்கிறேன். உன்னை நேரில் கண்டு கடைசிமுறையாக வேண்டிக்கொள்ளவே வந்திருக்கிறேன்." என்றான்.

காமாக்ஷி :—சோமநாதா! என்னை வேண்டிக்கொள்ளவா வந்தாய்? இனி உன் சொற்கள் என் காதில் ஏறாது. மேலும் நீ என்னைப் பின்பற்றி என்னைக் காண இவ்விதமாய் ஒளிந்துகொண்டேயிருக்க உனக்கு என்ன தைரியம்? இனி அவ் விஷயத்தைப்பற்றி என்னிடம் பேசக்கூடாதென்று அரங்கநாதன் வீட்டில் கண்டிப்பாய்ச் சொல்லவில்லையா? மரியாதையாய் வெளியில் போய்விடு.

சோமநா :— ஆனால் என்னைக் காப்பாற்ற உன்னால் ஒத்தாசை செய்ய முடியாதா?

காமாக்ஷி :— அது நீயே செய்துகொண்ட வேலை.



சோமநா :—நான் உனக்கு எத்தனையோ நன்மைகள் செய்வதாய் உத்தேசித்தே அப்பொழுது உனக்கு எச்சரிக்கை செய்தேன். நீ அதன்படி நடந்திருந்தால் இவ்வித கஷ்டங்களுக்கு உள்ளாகமாட்டாய். என் வார்த்தைகளை ஏன் கேட்கமாட்டேனென்கிறாய்?

காமாக்ஷி :—உனக்கும் உன் தோழருக்கும் பெரிய நமஸ்காரம். அவ் விஷயத்தைப்பற்றி உன்னிடம் பேச எனக்கிஷ்டமில்லை. ஆகையால் வந்தவழியே போகலாம்.

சோமநா :—ஏன் பேச இஷ்டமில்லை?

காமாக்ஷி :—ஏனென்றால் என் சிநேகிதர் ஒருவர் இவ்விடம் இருக்கின்றார். உன்னுடன் வார்த்தையாடிக்கொண்டிருக்க இஷ்டமில்லை. போய் வா. (என்று சொல்லி அவன் பின்பக்கம் சென்றாள்.)

சோமநாதன் திரும்பிப் பார்க்க வேற்று மனிதன் ஒருவன் நிற்பதைக் கண்டான். அம் மனிதன் தன்னைவிடக் கொஞ்சம் உயரமாயும், மூன்று அல்லது நான்கு வயது மூத்தவனாயும், நாணயமான உடைகள் தரித்துக்கொண்டும், கையில் ஓர் பிரம்பை வைத்துக்கொண்டும் இவர்கள் பேசுவதை உற்றுக் கேட்டுக்கொண்டுமிருந்தான். அவ்வன்னியன் காமாக்ஷியைப் பார்த்து "இவன் யார்? ஏதோ சோமநாதன் என்று சொன்னாயே? இவனுக்கு இங்கு என்ன வேலை?" என்று கேட்டான்.

காமாக்ஷி :—இவன் இவ்விடத்திற்கு யாதொருவருடைய உத்திரவின்றியில் வந்தவன். இவன் இங்கு வரவும் நியாயமில்லை. இவனைப் போகச் சொல்லுங்கள்.

அன்னியன் :—உன் பெயர் எனக்குத் தெரியாது. உன்னை நான் கண்டதுமில்லை. இந்தம்மாளுக்கு நீ இங்கு இருப்பதில் இஷ்டமில்லை. மரியாதையாய்ப் போய்விடுவது நலம். இல்லாவிட்டால் என் கையிலிருப்பதைப் பார். நான் சொல்லுகிறது தெரிகிறதா?

சோமநா :—நன்றாய்த் தெரிகிறது. ஆனால் இன்றுமுதல் இக் காமாக்ஷியம்மாள் என் ஒத்தாசையை இழக்க வேண்டுமென்பதைத் தெரிந்துகொள்ளட்டும்.

அன்னியன் :—உன் ஒத்தாசையையா அவள் வேண்டினாள்? சற்றுமுன் தானே அவளை உனக்கு ஒத்தாசை செய்யும்படி வேண்டிக்கொண்டாய்.

சோமநா :—அவளும் முடியாதென்று சொல்லிவிட்டாள்.

அன்னியன் :— ஆம்; அவள் அப்படிச் சொன்னதை நானும் கேட்டேன். தகுந்த காரணமின்றி அப்படிச் சொல்ல மாட்டாள்.

சோமநா :—ஐயா! தனது ரகஸ்யம் உங்களுக்குத் தெரியாதபடி அவள் மறைத்துவைக்கக் காரணமுண்டு. தங்களைப் பார்த்தால் இவள் காதலன் திருவேங்கடம் போல் தோன்றுகிறது. அப்படித்தானே?

திருவே :—பயலே! என்ன சொன்னாய்? (என்று பிரம்பை ஓங்கினான்.)

காமாக்ஷி:—வீணாகச் சண்டை ஏன்? இவனை விரட்டிவிடுங்கள்.

திருவே :—பயலே! இந்த ஸமயம் இவள் தடுக்காதபக்ஷத்தில் ஒரு நாய்க்குட்டியின் கழுத்தைத் திருகுவது போல் உன் கழுத்தைத் திருகியிருப்பேன். ஓடிப்போ.

உடனே சோமநாதன் அவ்விருவரையும் ஒரு தடவை வெறிக்கப் பார்த்துவிட்டு பக்கத்திலுள்ள சுவற்றைத் தாண்டி மறைந்துவிட்டான்.

அவன் சென்றதும் திருவேங்கடம் காமாக்ஷியைக் கட்டியணைத்து முத்தமிட்டான். காமாக்ஷியும் கட்டுக்கடங்காத ஆனந்தங்கொண்டு திருவேங்கடத்தை ஆலிங்கனம் செய்து முத்தமிட்டாள்.

திருவே :—என் கண்ணே! அந்தப் பயல் யார்?



காமாக்ஷி இதற்கு மறுமொழியொன்றும் சொல்லாமல் அவனது விசாலமான மார்பில் தன் தலையைச் சாய்த்துக் கொண்டு அவனை அணைத்தவண்ணம் நின்றாள். சோமநாதன் தனது காதலன் திருவேங்கடத்தைக் கண்டுகொண்டதினால் ஏதாவது தன் காதலனுக்கு அபாயம் நேரிடுமோ என்கிற எண்ணம் தோன்றக் கொஞ்சம் நடுங்கினாள்.

இதை உணர்ந்த திருவேங்கடம் அவளை நன்றாய் அணைத்துக்கொண்டு, "என் கண்ணே! பயப்படாதே. எங்கே எனக்கு ஒரு முத்தம் கொடு பார்ப்போம். நாம் கடசியாகச் சந்தித்துப் பிரிந்தது நெடுநாளாகிவிட்டாற் போல் தோன்றுகிறது. அது உனக்கு ஞாபகம் இருக்கிறதா?" என்றான்.

காமாக்ஷி :—"என் அன்பே! அது எனக்கா ஞாபகமில்லை? நன்றாய்க் கேட்டீர். உம்மை மறுமுறை தனித்துப் பார்க்கும் பாக்கியம் கிடைக்குமாவென்னும் ஏக்கமே ஜாஸ்தியாய் இருக்கிறது.

திருவே :—அப்படியா? நான்தான் உன்முன் நிற்கின்றேனே. (என்று சொல்லி மறுமுறை அணைத்து முத்தமிட்டான்.)

இவ்விதமாக இவ்விரு காதலரும் தங்களை மறந்து இன்பசாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். அவர்கள் ரகஸ்யத்தில் ஒருவரையொருவர் காதலித்துவந்தார்கள். சாதாரணமாய் நடுத்தர பதவியிலுள்ள இவனுக்குக் கல்யாணஸுந்தரம் பிரபு தன் ஏக புத்திரியைக் கொடுக்க சம்மதிப்பாரா? திருவேங்கடம் பணக்காரன்தான். பி.ஏ. பரிக்ஷையில் தேறி இஞ்சினீயரிங் காலேஜில் சேர்ந்து பெரிய பரிக்ஷை கொடுத்து டாம்ஸன் கம்பெனியில் மோட்டார் டிபார்ட்டுமெண்டில் மாதம் ஒன்றுக்கு ரூபாய் நானூறு சம்பளத்தில் அமர்ந்தான். என்னவிருந்தபோதிலும் பிரபுவின் சம்பந்தத்திற்குச் சரியானவன் அல்ல. அப்படியிருந்தபோதிலும் அவ்விருவரும் காதலித்துவந்தார்கள். தன் பிதாவின் உத்தரவு பெற்றபிறகே தங்கள் காதலை வெளியிடவேண்டு

மென்று காமாக்ஷி திருவேங்கடத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். ஆகையால் இவர்களின் நேசம் ரகசியமாகவே இருந்தது. திருவேங்கடம் அன்றையதினம் முன்னேற்பாட்டின்படித் தன் காரை ஏரிக்கரையில் மறைவாய் வைத்துவிட்டுக் கால்நடையாய் ஒருவருக்கும் தெரியாமல் அவ்விடம் வந்து அவளைச் சந்தித்தான்.

இவர்கள் இப்படி ஆனந்தக் கடலில் ஆழ்ந்திருக்கத் திருவேங்கடம் காமாக்ஷியைப் பார்த்து "நான் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லையே." என்றான்.

காமாக்ஷி :—தங்களிடம் அதை எப்படிச் சொல்வது?

திருவே:—அவன் பெயர்தான் சோமநாதன். அவன் உன்னை எதைப்பற்றி எச்சரித்தான்?

காமாக்ஷி :—எனக்கு ஏதோ நேரிடப்போவதாய்ச் சொன்னானே அதைப்பற்றித்தான்.

திருவே :—உனக்கு ஏதாவது அபாயமேற்படப்போகிறதா? அதைமட்டும் சொல். நான் இருக்கும்போது உனக்கு என்ன பயம்?

காமாக்ஷி :—அதை உம்மிடம் சொல்ல முடியாததற்கு மன்னிக்கவும்.

திருவே :—என்னிடம்கூடவா சொல்ல முடியாது? நீ அந்தப் பயலை நம்பவில்லை என்பது தெரிகிறது. அப்படியிருக்க ஏன் சொல்லக்கூடாது.

காமாக்ஷி இதற்குப் பதில் சொல்லாமலிருக்கத் திருவேங்கடம் மறுபடியும் "ஆனால் உன் ஒத்தாசையை வேண்டிக்கொண்டானே. அது எவ்விதமான ஒத்தாசை என்பதையாகிலும் சொல்." என்று கேட்டான்.

காமாக்ஷி :—ஒன்றுமில்லை. அவன் என்னைப் பயமுறுத்தினான். ஆனால் நீர் என்னைக் காதலிப்பதினால் அதை நான் சட்டைசெய்யவில்லை.

திருவே :—உன்னைக் காதலிப்பது மட்டுமா? என் உடல், உயிர், ஆவி எல்லாம் உன்னுடையதே.



காமாக்ஷி :—ஆகையால்தான் அவர்களுக்குப் பயப்படவில்லை.

திருவே :—அவர்களா? யார் அவர்கள்?

காமாக்ஷி :—என் சத்துருக்கள்தான். உங்களுக்கொன்றும் தெரியாது. எனக்கு நேரிடப்போகும் ஆபத்து ஓர் இடி மாதிரியானது. எந்த சமயத்தில் எவ்விதம் நேரிடுமோ?

திருவே :—அப்படியா? அது எவ்விதமான ஆபத்து? என்னிடம் ஏன் சொல்லத் தயங்குகிறாய்? உண்மையைச் சொல்லேன்.

காமாக்ஷி :—அது என்னைப்பற்றியதே. அதனால் உங்களுக்கு ஒரு கெடுதலும் உண்டாகாது.

திருவே :—உனக்கு வந்தால் அது எனக்குமில்லையா? உன்னுடைய சுக துக்கங்கள் என்னுடையது அல்லவா?

காமாக்ஷி :—அது எனக்குத் தெரியும். இச்சமயம் உம்மிடம் உண்மையைச் சொல்ல முடியாது. மன்னிக்க வேண்டும்.

திருவே :—அதை ஏன் என்னிடம் ஒளிக்கவேண்டும்?

காமாக்ஷி :—அப்படிச் சொல்லும்படியாய் அனுமதிக்கப்படவில்லை.

திருவே :—அதை நீ வெளியிடாமலிருக்கக் கட்டாயப்படுத்தப்பட்டிருப்பதாய்க் காண்கிறதே.

காமாக்ஷி :—ஆம். அதைக் கேட்பீராகில் ஒரு கட்டுக் கதையில்கூட இதுமாதிரியாய் நடந்திராதென்றே ஆச்சரியப்படுவீர்.

திருவே :—ஆனால் சொல்லமாட்டாயோ?

காமாக்ஷி :—இந்த சமயம் மன்னிக்கவேண்டும்.

திருவே :—நீ சொல்வதில் ஏதோ மர்மம் இருப்பதாய்த் தோன்றுகிறதே?

காமாக்ஷி :—எல்லாவற்றையும் உம்மிடம் நான் சொல்லக் கடமைப்பட்டவள். ஆனால் அதைச் சொல்ல எனக்குத் தைரியமில்லை.

திருவே :—அவர்களிடம் நீ பயப்படுகிறாயோ?

காமாக்ஷி :—ஆம். ஆகையால்தான் இந்த சமயம் உம்மிடம் ஒன்றும் சொல்லாமலிருப்பதே மேலானதென்று தோன்றுகிறது. மேலும் உம்மிடந்தான் சொல்லக்கூடாது.

இப் பேச்சை மாற்றக் கருதிய காமாக்ஷி "தங்களை தந்தி கொடுக்கும்படி எழுதியிருந்தேனே. ஏன் கொடுக்கவில்லை?" என்று கேட்டாள்.

திருவே :—நான் ஊரில் இல்லை. என் பிராண சிநேகிதன் ஒருவனுக்குப் பெரிய விபத்து நேர்ந்திருப்பதால், அது விஷயமாய் வெளியூர்களுக்குப் போயிருந்தேன்.

காமாக்ஷி :—உம்முடைய சிநேகிதற்கா ஆபத்து? அதைச் சொல்லும்.

திருவே.—அது அப்படி யொன்றும் பிரமாதமானதல்ல. அவன் கொஞ்சம் புத்தியில்லாமல் நடந்துகொண்டதினால், அவனைச் சிக்கவைக்க வீசியிருந்த வலையில் அகப்பட்டுக்கொண்டான். இதுமாதிரி இப் பட்டணத்தில் நடப்பது சகஜம்தானே.

காமாக்ஷி :—ஓகோ! அது காதல் விஷயமாய் இருக்கும் போல் காணப்படுகிறது. இப் பட்டணத்தில் பெண்களைப்பற்றியே அநேகம் ஆபத்துக்கள் உண்டாகின்றனவென்று பத்திரிகைகளில் பார்த்திருக்கிறேன். இதுவும் அதுமாதிரிதானோ?

திருவே :—அப்படி யொன்றுமில்லை. ஆனால் அதில் ஒரு பெண் அதிக மர்மமாய் நடந்துவருகிறாள். இதனை யோஜித்தால் அவனுக்கு ஆபத்து நேரிடும்போல் தோன்றுகிறது. அதன் உண்மையை அறியும்பொருட்டே இம் மூன்று நாட்களாய் அலைந்துகொண்டிருக்கிறேன்.



காமாக்ஷி :—இது மிகவும் ஆச்சரியமாய் இருக்கிறதே. அத் தோழர் யார்? அவர் பெயரென்ன? அவருக்கு என்ன ஆபத்து? இதை விபரமாய்ச் சொல்லவேண்டும்.

திருவே :—அவனைப்பற்றி உன்னிடம் அடிக்கடி தெரியப்படுத்தியிருக்கிறேன். அவன்தான் பாலகிருஷ்ணன்.

பாலகிருஷ்ணன் என்ற பெயரைக் கேட்ட காமாக்ஷி பேச நாவெழாமல் ஸ்தம்பித்துப்போய்விட்டாள். ஒருக்கால் பாலகிருஷ்ணன் தன்னைப்பற்றி அவ் விஷயத்தில் சம்பந்தப்பட்டவளென்று சொல்லியிருப்பானோவென்றும், அப்படிச் சொல்லியிருந்தால் தன் காதலன் தன்னைப்பற்றி கெட்ட அபிப்பிராயம் கொள்ளுவானே யென்றும், அந் நால்வர்கையிலும் தான் அவர்கள் கருவியாய் உபயோகப்படுத்தப்படுவது இவனுக்குத் தெரிந்துவிட்டால் என்ன விபரீதம் ஏற்படுமோவென்றும் எண்ணாததெல்லாம் எண்ணினாள். ஆனால் பாலகிருஷ்ணன் இவரிடம் தான் இன்னாள் என்பதைச் சொல்லியிருக்கமாட்டானென்றும் தைரியம் அடைந்தாள். ஆகையால் தான் ஒன்றும் அறியாதவள் போல் அபிநயிக்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு "என்ன? தங்கள் நண்பர் பாலகிருஷ்ணரா? ஏதாவது பெண்கள் விஷயத்தில் தவறி நடந்துகொண்டுவிட்டாரா?" என்று ஒன்றுமறியாதவள்போல் கேட்டாள்.

திருவே :—அப்படி யொன்றுமில்லை. நீ அவனைப் பார்த்திருக்கமாட்டாய். மிகவும் யோக்கியன். பெண்கள் விஷயத்தில்மட்டும் மிகவும் ஜாக்கிரதையுள்ளவன். உன் வாயால் ஓர் வர்த்தை வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். நீ என்னைக் கல்யாணம் செய்துகொள்வது நிச்சயம்தானே?

கமாக்ஷி :—என்ன கேள்வி? என்ன சந்தேகம்? இதை எத்தனைதரம் உம்மிடம் சொல்லுவது? கல்யாணம் செய்துகொண்டால் உம்மைத்தவிர ஒருவரையும் கல்யாணம் செய்துகொள்ளுவதில்லை. அப்படியில்லாவிட்டால் கன்னிகையாகவே என் காலத்தைக் கழிப்பேன். இது சத்தியம். உமக்கு ஏன் சந்தேகம் ஏற்பட்டது?

திருவே:—சோமநாதனைப்பற்றியவரையில்தான். அவனிடம் உனக்கு பிரியமில்லையே?

காமாக்ஷி:—என்ன பொறாமை? அவன் எனது விரோதியே தவிர சிநேகிதனல்ல. இனி இதுமாதிரிப் பேசாதீர்.

திருவே:—அப்படியானால் நானும் அவன் விரோதியே. நான் இப்படிக் கேட்டதற்குக் கோபித்துக்கொள்ளாதே. நாழிகையாகிவிட்டது. மாளிகையில் ஒருக்கால் உன்னைக் காணாமல் தேடுவார்கள். என்னைப் பார்க்க வேண்டுமானால் முன்மாதிரி ஒரு கடிதம் அனுப்பு, உடனே வந்துசேருகிறேன். அப் பயல் சோமநாதன் ஏதாவது தொந்தரவு செய்தால் நான் இருப்பதாய் அவனுக்கு ஞாபகம் மூட்டு. உடனே கெருடனைக் கண்ட பாம்புபோல் அடங்கிவிடுவான். நான் போய் வரவா?

காமாக்ஷி:—சரி; போய்வாருங்கள். அவசியமிருந்தால் கடிதம் எழுதுகிறேன். உடனே வரவேண்டும். சோமநாதன் இனி என்னிடம் வரமாட்டான்.

இவ்விதம் பேசிக்கொண்டே அவ் விருவரும் வாசல் பக்கம் வந்தார்கள். ஒருவரையொருவர் விட்டுப் பிரிய மனமில்லாமல் ஒருவரையொருவர் முத்தமிட்டுக் கடைசியாகப் பிரிந்தார்கள்.

காமாக்ஷி தான் வந்த வழியாகவே மாளிகைக்குள் சென்று தன் படுக்கையறை யடைந்து கட்டிலில் படுத்துக் கொண்டு பின்வருமாறு யோசிக்கலானாள்.

"இப் பாவி சோமநாதன் என் காதலனைத் தெரிந்து கொண்டதோடு நாங்கள் இரகசியமாய்ச் சந்திப்பதையும் தெரிந்துகொண்டுவிட்டான். மேலும் என்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளுவதாகவும் சொல்லிப்போயிருக்கிறான். ஆண்டவனே! நீ தான் என் காதலனைக் காப்பாற்றவேண்டும்" என்று இவ்வாறு யோஜித்துக்கொண்டே தூங்கிவிட்டாள்.

---



## அத்தியாயம் 10.

அன்றிரவு சுமார் பன்னிரண்டுமணி இருக்கலாம். கீழ்ப்பாக்கத்திலிருந்து ஒரு மோட்டார், கூவம் ஆற்றோரச் சாலைவழியாக திருவட்டீசுவரன்பேட்டையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அவ் வண்டியை ஓட்டிச் செல்பவன் திருவேங்கடமே. தனது நண்பன் பாலகிருஷ்ணன் தான் திடீரென்று பவழக்காரத்தெருவிலிருந்து காணாமற்போய் மூன்று நாட்களாகியும் தன்னைப்பற்றிய தகவல் ஒன்றும் தெரியாமல் என்ன கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறானோவென்றும் காலையில் அவனைப் போய்ப் பார்க்கவேண்டுமென்றும் யோஜித்துக்கொண்டே ஹாரிஸ் வாராவதியைத் தாண்டி ராயப்பேட்டை ரஸ்தாவழியாக மைலாப்பூரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

மோட்டார் ராயப்பேட்டையைத் தாண்டியதும், சற்று தூரத்தில் ரஸ்தாவின் மத்தியில் ஓர் மனிதன் நின்றுகொண்டு வண்டியை நிறுத்தும்படிச் சைகை செய்துகொண்டிருப்பதை மோட்டார் வெளிச்சத்தால் கண்டான். அவனை விலகிக்கொள்ளும்படி ஊதுகுழாயினால் எச்சரித்தும் அவன் விலகாததைக் கண்டு அவன் சமீபத்தில் வண்டியை நிறுத்தினான். அம் மனிதனைப் பார்த்தபொழுது அவன் அறுபது வயதுடைய கிழவனாயும், இடுப்பு வேஷ்டியை முழங்காலுக்குமேல் உடுத்திக்கொண்டும் இருந்தான். இக் கோலத்தால் அவன் ஓர் நாட்டுப்புரத்தான் என்றே எண்ணினான். வண்டி நின்றதும் "ஐயா! தயவுசெய்து எனக்கு கொஞ்சம் உதவிசெய்யப் பிரார்த்திக்கிறேன். என் பெண் குழந்தை தாங்கிக்கொண்டிருந்தபொழுது பக்கத்தில் வைத்திருந்த சீமையெண்ணை விளக்கில் அவள் உடை காற்றில் பறந்து விழுந்து, தீப்பிடித்துக்கொண்டது. அவள் கூச்சலிட பக்கத்து அறையில் படுத்திருந்த நான் ஓடிப்போய்ப் பார்க்க குழந்தையைச் சுற்றி நெருப்பு எறிவதைக் கண்டு அதை அணைத்தேன். குழந்தை மூச்சுப் பேச்சில்லாமல் கிடந்தது. அதற்கு மூர்ச்சை தெளிவிக்க என்னாலான

வரையிலும் பார்த்தேன். முடியவில்லை. உடம்பில் அநேக இடங்களில் நெருப்பு சுட்ட காயங்கள் இருக்கின்றன. அவளைத் தவிர இப் பூமியில் எனக்குச் சுற்றத்தாராவது ஆஸ்தியாவது கிடையாது. தாயில்லாப் பெண். தயவு செய்து அவளை வைத்தியசாலைக்குத் தங்கள் வண்டியில் ஏற்றிக்கொண்டுபோக மிகவும் உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். உமக்கு புண்ணிய முண்டு. உடனே வைத்தியம் பார்க்காவிட்டால் ஆபத்தாய் முடியும்.'' என்று கண்ணீர்விட்டு அழுதான்.

திருவே :—உன் பெண் அவ்வளவு அபாயத்திலா இருக்கிறாள் ?

கிழவன் :—ஆம். ஐயா ! நான் உடனே நெருப்பை அணைக்காவிட்டால் வீடே போயிருக்கும். என்றால் கூடிய வரையிலும் அவள் மூர்ச்சையைத் தெளிவிக்கப் பார்த்தும் பயன்படவில்லை.

அவனது தள்ளாத வயதையும் பரிதாபமான சொற்களையும் கேட்டுத் திருவேங்கடம் மனம் இளகி இரக்கங் கொண்டு “உன் வீடு எங்கே ? '' என்றான்.

கிழவன் :—இச் சந்தின் வழியாகப் போனால் அடுத்த தோட்டத்திலிருக்கிறது.

திருவே :—வீட்டில் ஒருவரும் இல்லையோ ?

கிழவன் :—நானும் என் குழந்தை மாணிக்கமுந்தான் இருக்கிறோம். அவளை உடனே வைத்தியசாலைக்குக் கொண்டுபோகாவிட்டால் என் ஒரே குழந்தையின் கதி யாதாகுமோ ? (என்று அழுதான்.)

இதைப் பார்த்த திருவேங்கடம் தன் மோட்டாரைச் சாலையோரமாய் விட்டுவிட்டுக் கிழவனைப் பார்த்து “சரி; உன் வீட்டிற்கு வா. நாமிருவரும் குழந்தையைத் தூக்கி வந்து வண்டியில் வைக்கலாம்.'' என்று சொல்லிக் கிழவனுடன் சென்றான். அவ் வீடு பாழடைந்த ஒரு சிறிய மெத்தை வீடு. அது சாலையைவிட்டு சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் ஒரு தோட்டத்தின் மத்தியிலிருந்தது. கிழவன்



[illegible]

வீடு வந்தவுடன் திருவேங்கடத்தை [illegible] துச்சென்று “ஐயா! குழந்தை அந்த அறையில் படுத்துக் கொண்டிருக்கிறது.'' என்று சொல்லி மற்றொரு அறைக்கு அழைத்துச்சென்று “ஐயா ! சற்று இங்கிருங்கள். நான் குழந்தையின் நிலைமையைப் பார்த்துவருகிறேன்.'' என்று சொல்லிச்சென்று சற்றுநேரத்திற்கெல்லாம் திரும்பிவந்து “குழந்தைக்கு மயக்கம் தெளியவில்லை. கை கால்கள் போட்டபடியே கிடக்கின்றன; எனக்கு என்னவோ விபரீதமாய்த் தோன்றுகிறது.'' என்று வருந்தப்பட்டான்.

திருவே :—எப்பொழுது தீப்பிடித்தது ?

கிழவன் :—அது நடந்து இரண்டுமணியாகின்றது. அது முதல் இதுவரையில் அவளை வைத்தியசாலைக்குக்கொண்டுபோக வண்டி அகப்படுமோவென்று பார்த்துக் கொண்டிருந்தேன். அகாலமானதால் ஒன்றும் கிடைக்கவில்லை, நல்லவேளையாய் உம்முடைய வண்டியின் ஊதுகுழாய்ச் சத்தம் கேட்டு ரஸ்தாவிற்கு ஓடிவந்தேன்.

திருவே :—உன் குழந்தையின் வயதென்ன ?

கிழவன் :—பதின்மூன்று ஆகிறது.

திருவே : - உன் பெயரென்ன ?

கிழவன் : – என் பெயர் தாமோதரம் பிள்ளை.

திருவே:—நல்லது. உன் குழந்தையை நான் பார்க்கலாமோ?

கிழவன் :—இந்தஸ்திதியில் அவளைப் பார்ப்பது மிகவும் பயங்கரமாயிருக்கும்.

திருவே : —அப்படியானால் நான் போய் ஒரு டாக்டரை அழைத்துவருகிறேன்.

கிழவன்:—அப்படிச் செய்தால் புண்ணியமுண்டு. அவளை இந்தஸ்திதியில் தூக்கிச் செல்வது அபாயமென்று இப்பொழுது தோன்றுகிறது.

இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும் கிழவன் முகத்தை திருவேங்கடம் அவ் வறையிலுள்ள மங்கலான வெளிச்

சந்தில் நன்றாய்ப் பார்த்தான். அவனுக்கு ஆச்சரியமும் சந்தேகமும் உண்டாகும்படி கிழவன் சிறித்துக்கொண்டு தன் முகத்தையே உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கக் கண்டான். உடனே குழந்தைக்கு அபாயமேற்பட்டதாக பாசாங்கு செய்து தன்னை அவ்விடம் சூதாக அழைத்துவந்திருப்பதாய்த் தெரிந்துகொண்டு தைரியத்தைவிடாமல் கிழவனை உற்றுப்பார்த்தான். உடனே கிழவன் "நீதானா டாம்சன் கம்பெனியில் இருக்கும் திருவேங்கடம்?" என்று கம்பீரமான குரலில் கேட்டான்.

திருவே :—நான் தான் திருவேங்கடம். நீ யார்?

கிழவன் :—அதைப்பற்றி அக்கரையில்லை. இப் படத்தைப் பார். இது யாருடையதென்பதைமட்டும் சொல்லு. (என்று ஒரு போடோவைக் காட்டினான்.)

திருவேங்கடம் அப் படத்தைப் பார்த்ததும் அன்று பவழக்காரத்தெரு வீட்டில் கொலை செய்யப்பட்டிருந்த பத்மநாபனுடைய படமாயிருக்கக் கண்டு பிரமித்துப் பேச நாவெழாமல் நின்றான். அதே சமயத்தில் அக் கிழவனுக்குப் பின்னால் நம் அரங்கநாதன் வந்து நின்றான். தனது நண்பன் பாலகிருஷ்ணனால் அந் நால்வர்களின் அடையாளங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டிருந்த திருவேங்கடம் அப்படி வந்து நிற்கிறவன் அரங்கநாதன் என்று நிச்சயம் செய்துகொண்டான். தனது நண்பனைப்போலவே தானும் வஞ்சிக்கப்பட்டு மோசடியாய்த் தனிமையான இடத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தெரிந்துகொண்ட திருவேங்கடம் தனது கைத்துப்பாக்கியை வைத்திருந்த பையில் கையை விட்டுக்கொண்டு மிக்க ஜாக்கிரதையாய் இருந்தான். இதைக் கண்ட அரங்கநாதன் "திருவேங்கடம்! நீ ஏன் பயப்படவேண்டும்? உனக்கு ஒருவித தீங்கும் ஏற்படாது. அப்படி உனக்குக் கெடுதல் செய்வதாயிருந்தால் சற்றுநேரத்திற்குமுன்பே உன்னை உன் வண்டியுடன் தொலைத்திருப்பேன். நீ வீணாய்த் துப்பாக்கியைத் தயாராய் வைத்துக்கொள்ளவேண்டாம். கையை எடுத்துவிடலாம். உன்னை இங்கு வரவழைத்தது உன்னுடன் சில வார்த்தைகள் பேசுவதற்கே. வேறுவிதமான உத்தேசம் கிடையாது." என்றான்.



திருவே :—நீ அரங்கநாதன் என்று நினைக்கிறேன். அது சரிதானா?

அரங்க :—ஆம். நான்தான் அரங்கநாதன். நான் கேழ்க்கும் கேழ்விகளுக்குப் பதிலளிக்கவேண்டும். இப் படம் உமது நண்பர்களில் ஒருவருடையதா?

திருவே .—என் நண்பனுடையது அல்ல, உன் விரோதியின் படம். உன்னால் என்னை ஏமாற்றமுடியாது.

அரங்க :—நீ என்னை இதற்குமுன்னால் பார்த்திருக்கமாட்டாய் என்று நினைக்கிறேன்.

திருவே :—அப்படிப்பட்ட பாக்கியம் எனக்குக் கிடைக்காமலிருந்தது எனது பாக்கியம்தான். இப் படத்தைக் காட்டவா என்னை இங்கு அழைத்துவந்தது?

அரங்க :—இப்படம் யாருடையதென்று நீ தெரிந்துகொண்டிருப்பாயோவென்று பார்த்தேன்.

திருவே :—இவ்வளவுதானே. இப்படம் யாருடையதென்று உனக்குத் தெரிந்திருப்பதுபோலவே எனக்கும் தெரியும். எனக்கு இங்கு தாமதிக்க சாவகாசம் கிடையாது. நான் போய்வருகிறேன். (என்று சொல்லிக் கதவினிடம் வந்தான்.)

இதைக் கண்ட அரங்கநாதன் கதவை சாத்தி அதன் மேல் சாய்ந்துகொண்டவண்ணம் திருவேங்கடத்தை உற்றுப்பார்த்துக்கொண்டு "என் கேழ்விகளுக்கு விடையளித்தபிறகே நீ வெளியே சொல்லவேண்டும். அப்படிச் செய்வதுதான் உனக்கு நன்மை. வேறுவிதமாய் நடந்துகொண்டால் வருவதை நீதான் அனுபவிக்கவேண்டும். இதை உனக்கு முன்னதாகவே சொல்லிவிட்டேன். உன் இஷ்டப்படி நடந்துகொள்ளலாம்." என்றான்.

திருவே :—என்னை கட்டாயப்படுத்த உனக்கு என்ன பாத்தியம்?

அரங்க :—ஒன்றுமில்லை. சில விஷயங்களைத் தெரிந்துகொள்ளவே கேட்கிறேன்.

திருவே :—விஷயம் தெரிந்துகொள்ளவேண்டியதாய் இருந்தால் வழியே போகும் ஒருவனைச் சூதாய்க் கொண்டுவந்துதானா கேட்கவேண்டும்? எனது நண்பன் பாலகிருஷ்ணனை அச்சிறு பெண்ணைக்கொண்டு ஏமாற்றியதுபோல் என்னையும் செய்திருக்கிறாய். இது யோக்கியர்கள் செய்யும் வேலையல்ல.

அரங்க :—அதைப்பற்றி பிறகு பேசிக்கொள்ளலாம். இப்பொழுது நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லப்போகிறீரா இல்லையா?

திருவே :—நான் பதில் சொல்லப்போவதில்லை. நான் உனக்குக் கட்டுப்பட்டவனல்ல. கதவைத் திற.

உடனே அரங்கநாதன் கதவை உட்பக்கம் பூட்டிக்கொண்டு சாவியைப் பையில் வைத்துக்கொண்டான்.

திருவே :—ஓகோ! என்னைச் சிறைவைக்கவா உத்தேசம்? நீ வயதில் பெரியவனாக இருந்தாலும் உன்னை ஒரு வெறிபிடித்த நாயைச் சுட்டுத்தள்ளுவதுபோல் தள்ளிவிடுவேன். திற கதவை.

அரங்க:—ஏன்? செய்கிறதுதானே. இந்த சமயம் என்னோடு சண்டையிடுவது சரியா என்று யோசித்துப்பார். இன்றுமுதல் நீயும் நானும் விரோதியே.

திருவே :—ஆம். கொலைகாரர்களோடு எவன் சினேகம் வைத்துக்கொள்வான்? பவழக்காரத் தெருவிலுள்ள உன் வீட்டில் நடந்திருக்கும் கொலையைக் கண்டுபிடிக்க நான் முயற்சி செய்வதால் நானும் உன் விரோதியே.

அரங்க :—நீ சொல்லுவது வேடிக்கையாகவல்லவோ இருக்கிறது. அதைப்பற்றி எனக்கொன்றுமே தெரியாது.

திருவே :—அப்படி கொலை செய்யப்பட்டவன் பத்மநாபனென்பதையும் மறுப்பாய்போலத் தோன்றுகிறதே.

1152331



அரங்க :—ஆம். அதைக் கண்டிப்பாய் மறுதளிப்பேன். எனக்குத் தெரிந்தவரையில் பத்மநாபன் சௌக்கியமாய் இப்பட்டணத்திலேயே இருக்கிறான். இது நிச்சயம்.

திருவே :—ஆமாம். சௌந்தர விலாஸத்தில் இருக்கிறானே அப் பத்மநாபன் தான். (என்று ஏளனமாய்ச் சொன்னான்.)

அரங்க :—அவனல்ல. உண்மையான பத்மநாபன் சுகமாகவே இருக்கிறான். இது நிச்சயம்.

திருவே :—அது நிச்சயமானால் நீ ஏன் எனது நண்பனுக்குப் பணம் கொடுத்து அவனைப்போல் வசிக்க ஏற்பாடு செய்தாய்?

அரங்க :—ஆம். ஒரு ஆயிர ரூபாய் கொடுத்திருக்கிறேன். இன்னும் இருபத்தீராயிர ரூபாய் கொடுக்கப்போகிறேன். ஒரு பாபருக்கு இவ்வளவு தொகை கிடைப்பது எளிதோ?

திருவே :—எதற்காக அப்படிச் செய்யவேண்டும்?

அரங்க :—அது எங்களைப்பற்றியதே தவிர உனக்குச் சம்பந்தம் கிடையாது.

திருவே :—ஆம். நீ செய்திருக்கிற கொலையை மறைத்து பத்மநாபன் உயிருடன் இருப்பதாக பிறர் நம்பவே இப்படிச் செய்திருக்கிறாய்.

அரங்க :—நீயோ பத்மநாபன் இறந்துவிட்டதாய் தீர்மானித்துவிட்டாய். நான் என்ன சொன்னபோதிலும் நம்பமாட்டாய். ஆகையால் இனி இதைப்பற்றிப் பேசுவதில் பிரயோஜனமில்லை. உன்னுடன் இவ்விஷயத்தைப்பற்றி இனி பேச எனக்கு இஷ்டமில்லை.

திருவே :—ஏது? முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பாய்போல் இருக்கிறதே.

அரங்க :—எனக்குத் தெரிந்தவரையில் என் வீட்டில் ஒருவரும் இறக்கவில்லை. உங்களுக்குப் பிரமைதான்.

188791

திருவே :—என் கண்ணால் கண்டதைக்கூடவா நம்ப முடியாது?

அரங்க :—என் கண்ணால் கண்டதைப் பாதிகூட நம்பமாட்டேன்.

திருவே :—சரி. என்னை இங்கு அழைத்துவந்த காரியம் என்ன?

அரங்க :—அப்படிக் கேள். இதோ சொல்லுகிறேன். முதலில் உன்னை இங்கு அழைத்துவந்ததைப்பற்றி என்னை மன்னிக்கவேண்டும். அப்படிச் செய்யாவிடில் நீயும் இங்கு வந்திருக்கமாட்டாய். நானும் உன்னுடன் ரகசியமாய்ப் பேசமுடியாது. உனது நண்பன் பணத்தட்டினால் தற்கொலை செய்துகொள்ளப்போகும் சமயத்தில் அவனைக் காப்பாற்றினேன். அவன் செய்யவேண்டியதும் பிரமாதமான காரியமல்ல. பத்மநாபன் என்னும் பெயருடன் வசிக்கவேண்டியதே. இதில் என்ன தப்பிதம்?

திருவே :—நீ ஒன்றையும் ஒளிக்காமல் கபடமன்னியில் பேசுவதாய்ச் சொன்னாய். அவன் ஏன் அப்படி வசிக்கவேண்டும்?

அரங்க :—அது விஷயம் எங்கள் ஐவருக்குந்தான் தெரியும். அது மிகவும் ரகஸ்யமான சமாசாரம்.

திருவே :—ஏதோ ரசாயன ஆராய்ச்சியைப்பற்றியதென்று சொன்னான். ஆனால் அதை நான் நம்பவில்லை. அது வெறும் கட்டுக்கதையே தவிர உண்மையல்ல.

அரங்க :—நீ உன் மனதிலுள்ளதை ஒளிக்காமல் சொல்லிவிட்டாய். ஆகையால் நானும் உண்மையைச் சொல்லுகிறேன். நான் பாலகிருஷ்ணனிடம் சொன்னது பொய்தான். நீயோ அவனது நண்பன். உங்களிருவரின் க்ஷேமத்தைக் கருதியே சொல்லுகிறேன். ஏதோ என் வீட்டில் கொலை நடந்திருப்பதாயும், அதை வெளிப்படுத்த நீங்கள் பிரயத்தனம் செய்வதாயும்,

188791
000 003



எங்களைப்பற்றிய தகவல்[illegible]கொள்ளத் துப்பு விசாரிப்பதாயும் தெரியவருகிறது. நீயாவது உன் நண்பனாவது இனி இதில் தலையிட்டுக் கொள்ளக்கூடாது. நீ செய்வது எனக்குத் தெரியாதென்று நினைத்துக்கொண்டிருக்கிறாய். நீ இந்த மூன்று நாளாய் என்ன செய்துகொண்டிருந்தாய் என்பதைச் சொல்லுகிறேன். அதிலிருந்தாவது நான் உன்னை எவ்விதம் கவனித்துவருகிறேன் என்பது நன்றாய்த் தெரியவரும்.

திருவே :—சொல்லு. பார்ப்போம். (என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.)

அரங்க :—சொல்லுகிறேன் கேள். நீயும் பாலகிருஷ்ணனும் மூன்று நாட்களுக்கு முன்பு ராத்திரி என் வீட்டைக் கவனித்துக்கொண்டிருந்தீர்கள். அப்பொழுது மணி பன்னிரண்டு. பாலகிருஷ்ணன் என் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தான். நீ சற்று தூரத்தில் மறைவாய் நின்றுகொண்டிருந்தாய். அப்பொழுது ஒருவன் என் வீட்டைநோக்கி உன்னைத் தாண்டி வந்துகொண்டிருந்தான். பாலகிருஷ்ணன் எங்கள் அடையாளத்தை உனக்குச் சொல்லியிருந்ததினாலும் வந்தவன் அவ்வடையாளமுள்ளவனாய் இருந்ததினாலும் அவன்மேல் சந்தேகம் கொண்டு அவனைப் பின்தொடர்ந்தாய். அவன் நீ பின்தொடருவதைத் தெரிந்துகொண்டு தம்புசெட்டித் தெருவிலுள்ள ஓர் ஹோட்டலில் காலை ஏழுமணி வரையிலும் தங்கியிருந்தான். பிறகு பீச்சுக்குச் சென்று செங்கல்பட்டிற்கு டிக்கெட் வாங்கிக்கொண்டு ரயிலேறினான். நீயும் கூடவே சென்றாய். செங்கல்பட்டிலிருந்து அரக்கோணம் சென்றான். நீயும் கூடவே சென்றாய். நான் சொல்வது சரிதானே.

திருவே :—சரிதான். மேலே சொல்லு.

அரங்க :—அங்கிருந்து பெங்களூருக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டு புறப்பட்டான். நீயும் கூடச்சென்றாய்.

187781
சென்னை-600 008

அவன் [illegible] ஏமாற்ற ஜோலார்பேட்டையில் பிளாட்பாரத்தின் மறுபக்கத்திலிறங்கி திருச்சிறைப் பள்ளிக்கு வந்தான். ஆனால் நீ அவன் நிழலைப் போல் பின்தொடர்ந்தாய். அங்கிருந்து பட்டணம் புறப்பட்டான். நீயும் கூடவே வந்தாய். கூடலூர் வந்ததும் நீ தூங்குவதைக் கண்டு ரகசியமாய் கீழே இறங்கி புதுச்சேரி போய்விட்டான். ஆனால் நீ தூங்குவதுபோல் பாசாங்கு செய்தது அவனுக்குத் தெரியாது. ஆகையால் அவனைக் கைது செய்யும்படியான தகவல்களைப் போலீசுக்குச் சொல்லிவிட்டு பட்டணம் வந்துவிட்டாய். இன்றைய ராத்திரி 10 மணிக்கு கீழ்ப்பாக்கம் போகும்போது எழும்பூர் ஸ்டேஷனின் எதிரிலுள்ள ஹோட்டலில் அவன் இரண்டு சிநேகிதருடன் காபி சாப்பிட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு பிரமித்துவிட்டாய். பிறகு ஆனந்த நிலயம் சென்று அங்கிருந்து நேராக வருகிறாய். நான் சொல்வதில் பிசகு இருந்தால் சொல்லு.

திருவே :—மிகவும் சரியாகவே இருக்கிறது. இது உனக்கெப்படித் தெரியும்? என்னை இங்கு காக்கவைக்க வேண்டிய காரியமென்ன?

அரங்க :—நீ என்னைப்பற்றியாவது என் தோழர்களைப் பற்றியாவது தகவல்களை எங்கு விசாரித்தாலும் அல்லது தெரிந்துகொள்ள முயன்றாலும் அது எனக்குத் தெரிந்துவிடும் என்பதை உனக்குக் காட்டவே இங்கு அழைத்துவந்தேன். மேலும் நீ அப்படி நடப்பது எங்களுக்கு விரோதமானதென்றும் தெரிந்துகொள்.

திருவே :—இதை ஏன் என்னிடம் வீட்டிலாவது அல்லது கம்பெனியிலாவது வந்து சொல்லியிருக்கக்கூடாது.

அரங்க :—உன்னைத் தனிமையில் கண்டே சொல்லவேண்டுமென்பது எனது எண்ணம்.

திருவே :—இது விஷயத்தில் என் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் நடக்கமாட்டேன்.

வெளிவந்துவிட்டது!  வெளிவந்துவிட்டது!!

*பாலவித்யா ஜர்னலில் 1 2 வருஷங்களில் முடிவடைந்த, அதி ஆச்சர்யமான திடுக்கிடும் சூழ்ச்சிகளும், காதல் மாட்சிகளும், கற்பின் விசேஷமும், துப்பறியும் தீரமும் நிறைந்து, நவரஸங்களும் அமைந்த இனிய தமிழ் நாவல்கள்*

(P. *கும்பேசுவரன் இயற்றியது*)

| | | | | |
|---|---|---|---|---|
| **சபேசன்** ... ... ... | ரூ. | 1 | 8 | 0 |
| **நாகலிங்க நாடான் அல்லது ஏழைகளின் ஊழியன்** ... | ,, | 1 | 4 | 0 |
| **தியாகராஜன்** ... ... | ,, | 1 | 0 | 0 |
| **கங்காதரன்** ... ... | ,, | 0 | 12 | 0 |

(K. *குப்புஸ்வாமி இயற்றியது*)

| | | | | |
|---|---|---|---|---|
| **கற்புள்ள இந்திரா** ... ... | ரூ | 0 | 8 | 0 |

பாலவித்யா ஜர்னலில் 3வது ஆண்டில் சேரும் புதுய சந்தாதாரர்கள் ஷை நாவல்களுக்கு ஆர்டர் செய்தால் தபாற் சிலவு இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.

**பாலவித்யா ஆபீஸ்,**
கும்பகோணம்.

---

# "மாஸ்டர் டோபி"

இந்த "மாஸ்டர் டோபி ஸோப்" எவ்வித உடைகளையும் சிரமமின்றி வெளுக்கும் திறமையுள்ளது. மற்ற எல்லா சோப்புகளைவிட குணத்தில் மேன்மையானது. ஒருமுறை உபயோகித்தால் நன்குவிளங்கும்.

எல்லாவிடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.
விலை விபரத்திற்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

**மோஹினி ஸோப் ஒர்க்ஸ்,**
5, கிழய்யன் தெரு, கும்பகோணம்.

# பிரஸவ காலத்தில் செய்யவேண்டிய முதல் உதவி.

## நூலாசிரியர்—டாக்டர் யூ. ராம ராவ்.

நமது இந்துதேசத்தில் தாய்களின் மரண விகிதமும் சிசுக்களின் மரண விகிதமும் தற்போது அதிகமாகவிருக்கிறது ஒரு வயதுக்குட்பட்ட சிசுக்களில் 1000க்கு 260 பேர்கள் வருஷவாரி மாண்டுபோகிறார்கள் தாய்மார்கள் கர்ப்பிணிகளாக இருக்கும்போது ஆரோக்கிய விதிகளைக் கவனியாமல் தேகத்தை பலஹீனப்படுத்திக்கொள்வதும், பிரஸவகாலத்தில் டாக்டர், தேர்ச்சிபெற்ற மருத்துவ ஸ்திரீ இவர்கள் உதவி இல்லாமல், புராதன பழக்கத்தைக் கைப்பிடித்து ஒன்றும் தெரியாத மருத்துவகுல ஸ்திரீகளைக்கொண்டு மருத்துவம் செய்துகொள்வதும், சிசு பிறந்த பிறகு அதற்கு வேண்டிய போஷிப்பைச் சரிவர செய்யாமலிருப்பதுமே இதற்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன. ஆனதுபற்றி இந்திய ஸ்திரீகளுக்கு பிரஸவத்தைக் குறித்து அற்ப ஞானமாகிலும் இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது முதல் உதவிபுரியப் போதுமான அறிவு இல்லாமையால் அநேக கெடுதிகள் சம்பவிக்கின்றன பிரஸவ வேதனைப்படும்போது டாக்டர் அல்லது மருத்துவ ஸ்திரீ வரும்வரையில் இன்னது செய்யவேண்டுமென்பதை மட்டும் இச் சிறு நூல் கற்பிக்கிறது இதில் பதினான்கு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன கர்ப்பச் சின்னங்கள், கர்ப்பகாலத்தில் நேரிடும் விபத்துக்கள், சுகப்பிரசவம், கஷ்டப் பிரசவம், பிரசவத்தில் பரிசுத்தம், பிரசவகாலத்தில் நேரிடக்கூடிய சிக்கான வியாதிகள், குழந்தையின் பாதுகாப்பு, சிசுக்களின் போஷிப்பு இவை முதலியன யாவரும் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள். இப்புத்தகம் எளிய தமிழ் நடையில் பரிபாஷைக் கலப்பின்றி எழுதப்பட்டிருக்கிறது

**விலை அணா 6.**

ஒரு காப்பி வேண்டுவோர் 7 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும் வி. பி. யில் அனுப்பவேண்டுமானால் ஆறு காப்பிக்கு குறையாமல் ஆர்டர் செய்யவேண்டும் வேண்டுவோர் சென்னை தம்புசெட்டித்தெரு 323 நெ. ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் விலாசம்—ஆரோக்கிய தீபிகை மானேஜர், தபாற்பெட்டி 166, சென்னை என்று எழுதவும்

Printed and Published by N. Venkataraman,
at the Sri Vidya Press, Kumbakonam.